# கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்

**கோவை- 21.**

Enable | Enlighten | Enrich
KARPAGAM
ACADEMY OF HIGHER EDUCATION
(Deemed to be University)
(Established Under Section 3 of UGC Act, 1956 )

# கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்

# தமிழ்த்துறை

(2019-2020)

**பகுதி – I, தமிழ்ப் பாடத்திட்டம்**

**முதல் பருவம்:19LSU101**

(முதலாமாண்டு இளநிலை **அறிவியல்** பட்ட வகுப்புகளுக்குரியது)

# (For I-UG Science Degree Classes)

# கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்
# தமிழ்த்துறை
# பகுதி - I தமிழ்ப் பாடத்திட்டம் (2019 - 2020)
# (இளநிலை அறிவியல் பட்ட வகுப்புகளுக்குரியது)
# (For I-UG Science Degree Classes)

**பாடத்திட்டப் பொதுநோக்கம்**

- கற்றல் வழி சிந்தனைத் திறனையும், கருத்து வெளிப்பாட்டுத் திறனையும், ஆய்வுநோக்கையும் மேம்படுத்துதல்.
- இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வின் நுட்பமான பகுதிகளை உணர்த்துதல்.
- மனித மனத்தினைப் பக்குவப்படுத்துதலில் இலக்கியம் தரும் பங்கினை உணர்த்துதல்.
- வளர்ந்து வரும் சமூகத்தில் அறஉணர்வு, பண்பாடு போன்றவை குறித்து அறிவூட்டல்.
- அரசுத் தேர்வுகளுக்கு மாணவர்களை ஆயத்தமாக்குதல்.

**பாடத்திட்டப் பயன் விளைவு**

- இந்திய குடியுரிமைப் பணி முதலான போட்டித் தேர்வுகளில், விருப்பப் பாடமாக இடம்பெறுகின்ற, 'தமிழ் இலக்கிய வரலாறு' குறித்த முழுமையான அறிமுகம் பெற்றிருத்தல்.
- கல்வெட்டியல், ஓலைச்சுவடியியல் மற்றும் தொல்லியல் சார்ந்த ஆவணத் தேடலுக்குரிய ஆய்வுமனப்பான்மையுடன், இலக்கியங்களை அணுகுதல்.
- தமிழின் வளர்ச்சித் துறையாகிய, 'அறிவியல் தமிழ்' ; 'இணைய தமிழ்' குறித்த பன்நோக்கு அணுகுமுறையிலான ஆய்வுச் சிந்தனை வளர்ச்சி பெற்றிருத்தல்.
- வேலைவாய்ப்புக்குரிய சுயதிறன் மேம்பாட்டுடன், படைப்பாக்கத்திறன் மேம்பாடும் பெற்றிருத்தல் .
- சமுதாய மற்றும் வாழ்வியல் மதிப்புகளைப் பேணுவதற்குக் கருவியாக இலக்கியங்களை நாடுகின்ற மனப்பான்மை வளர்ச்சி.

## தாள்கள் வரிசையும் தேர்வுச் செயல்திட்டமும்

## பகுதி-I தமிழ்
## இளநிலைப் பட்ட அறிவியல் வகுப்புகள்

| பருவம் | தாள் | கற்பிக்கும் நேரம்/வாரம் | தேர்வு மணிகள் | மதிப்பெண் அக/எழுத்து | மொத்தம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| ஒன்று | I | 4 | 3 | 40 / 60 | 100 | 4 |

## கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்

# தமிழ்த்துறை

## பகுதி - I தமிழ்ப் பாடத்திட்டம் (2019-2020)

**பகுதி– I, தமிழ்** **முதல் பருவம்** **19LSU101 :**

**தமிழ் முதல் தாள்** 4-H,4-C

**(இளநிலை அறிவியல் பட்ட வகுப்புகளுக்குரியது)**

**(For I-UG Science Degree Classes)**

---

### அலகு – I : இக்கால இலக்கியம்: (10 மணிநேரம்)

1. மகாகவி பாரதியார் – பரம்பொருள் வாழ்த்து .
2. புரட்சிக்கவிஞன் பாரதிதாசன் – தமிழின் இனிமை.
3. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை – கோவில் வழிபாடு.
4. கவிக்கோ. அப்துல்ரகுமான் – பாருக்குள்ளே நல்ல நாடு.
5. சிற்பி பாலசுப்பிரமணியன் – காலம்.
6. கவிஞர் தாமரை – தொலைந்து போனேன்.

### அலகு – II : அற இலக்கியம்: (8 மணிநேரம்)

1. ஔவையார் – கொன்றை வேந்தன் (1- 50 பாடல்கள்)

   அன்னையும் பிதாவும் – புலையும் கொலையும் களவும் தவிர்

2. வேதநாயகம்பிள்ளை - நீதிநூல் – (5 பாடல்கள்)

   சின்னவோர் பொருள், கடவுளை வருந்தி, எப்புவிகளும், வைத்தவர், ஈன்றவர்

3. திருவள்ளுவர்- திருக்குறள்– பண்புடைமை, வினைத்திட்பம்
4. முன்றுறையரையனார் – பழமொழி நானூறு 5 பாடல்கள்

உணற்கு இனிய, பரந்த திறலாரை, நெடியது காண்கிலாய், இனி யாரும், உரைசான்ற

### அலகு – III : சிற்றிலக்கியம்: (8 மணிநேரம்)

1. முக்கூடற் பள்ளு- 2 பாடல்கள் - சித்திரக் காலிவாலான் (நெல்வகைகள்)

   குற்றாலத் திரிகூட மால்வரை (மீன் வகைகள்)

2. நந்தி கலம்பகம்- 5 பாடல்கள்- என்னையே புகழ்ந்தேன், பதிதொறு புயல்பொழி,

   இந்தப்புவியில், அடிவிளக்கும் துகில், வானுறுமதியை

3. மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது –தமிழின் சிறப்பு

   பாடியருள பத்துப்பாட்டும்-விளம்பக்கேள்.

**அலகு – IV :** சிறுகதை: **(8 மணிநேரம்)**

1. மகாமசானம் – புதுமைப்பித்தன்
2. அப்பாவின் வேஷ்டி – பிரபஞ்சன்
3. அந்நியர்கள் – ஆர். சூடாமணி
4. இந்நாட்டுமன்னர் – நாஞ்சில்நாடன்

**அலகு – V : மொழிப்பயிற்சி: (6 மணிநேரம்)**

1. பொருத்தமான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதல்
2. செய்யுள் பொருளுணர் திறன்
3. மொழிபெயர்ப்புப் பயிற்சிகள்
4. கடிதங்கள் மற்றும் விண்ணப்பங்கள் எழுதுதல்

பாட நூல்: **கற்பகச்சோலை – தமிழ் ஏடு.**

கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

---

Part I TAMIL 2019. Science Karpagam Academy of Higher Education, Coimbatore – 21.

# KARPAGAM ACADEMY OF HIGHER EDUCATION

*(Deemed to be University Established Under Section 3 of UGC Act 1956)*

**Coimbatore – 641 021.**

## LECTURE PLAN DEPARTMENT OF TAMIL

STAFF NAME: Dr. R. Suresh
SUBJECT NAME: TAMIL SUB.CODE:19LSU101
SEMESTER: I CLASS: I BCA

| Month | Topics to be Covered | Lecture Duration Period | Support Material/Page Nos |
|---|---|---|---|
| ஜீலை 2019 | பாடத்திட்டத்தின் இன்றியமையாமையும், பயன்பாட்டு நோக்கும் | 01 | |
| | தமிழ் இலக்கிய வரலாறு - அறிமுகம் | 01 | |
| | இக்கால இலக்கியம் - அறிமுகம் | 01 | |
| | பரம்பொருள் வாழ்த்து - பாரதியார் | 02 | T1:07 |
| | திருக்குறள் – பண்புடைமை அதிகாரம் | 02 | T1:31 |
| | புதுமைப்பித்தன் – மகாமசானம் சிறுகதை | 02 | T1:45 |
| | முக்கூடற் பள்ளு – நெல் , மீன்வகைகள் | 02 | T1:37 |
| | ஔவையார் – கொன்றை வேந்தன் | 02 | T1:27 |
| | கடிதப் பயிற்சி – நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் | 02 | T1:120 |
| | திருப்புதல் | 01 | |
| | **மொத்த மணிநேரம்** | **16** | |
| ஆகஸ்ட் 2019 | புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் – தமிழின் இனிமை | 01 | T1:08 |
| | மாயூரம் வேதநாயகம் – நீதி நூல் | 01 | T1:29 |
| | கடிதப் பயிற்சி - வேலை வேண்டி விண்ணப்பம் | 01 | T1:120 |
| | பிரபஞ்சன் – அப்பாவின் வேஷ்டி - சிறுகதை | 02 | T1:54 |
| | திருக்குறள் – வினைத்திட்பம் - அதிகாரம் | 02 | T1:32 |
| | நந்திக் கலம்பகம் | 02 | T1:39 |
| | ஆர்.சூடாமணி - அந்நியர்கள் | 02 | T1:65 |
| | மதுரைச் சொக்கநாதர் தமிழ் விடுதூது | 02 | T1:41 |

| | | | |
|---|---|---|---|
| | கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுதல் | 01 | T1:113 |
| | திருப்புதல் | 02 | |
| | **மொத்த மணிநேரம்** | **16** | |
| **செப்டம்பர் 2019** | கவிமணி – கோவில் வழிபாடு | 01 | T1:11 |
| | அப்துல் ரகுமான் – பாருக்குள்ளே நல்ல நாடு | 01 | T1:13 |
| | சிற்பி பால சுப்பிரமணியன் - காலம் | 01 | T1:16 |
| | பழமொழி நானூறு | 01 | T1:33 |
| | நாஞ்சில் நாடன் – இந்நாட்டு மன்னர் | 02 | T1:83 |
| | கு. அழகிரி சாமி – இருவர் கண்ட ஒரே கனவு | 02 | T1:99 |
| | கவிஞர் தாமரை – தொலைந்து போனன் | 01 | T1:20 |
| | கடிதப் பயிற்சி - கருத்தரங்கப் பங்கேற்பு அனுமதிக் கடிதம் | 01 | T1:120 |
| | மொழிப் பயிற்சி | 01 | T1:115 |
| | திருப்புதல் | 01 | |
| | **மொத்த மணிநேரம்** | **12** | |
| **அக்டோபர் 2019** | திருப்புதல் | 04 | |
| | **மொத்த மணிநேரம்** | **04** | |
| | **மொத்த மணிநேரங்கள்** | **48** | |

**TEXT BOOK**

**. பாட நூல்: கற்பகச்சோலை – தமிழ் ஏடு.**

கற்பகம் உயர்கல்வி கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு.

**WEBSITES**

**W1**: www.tvulibrary.org.in

**W2:** http://www.maduraitamilproject.com

## UNIT-I

## SYLLABUS

**இக்கால இலக்கியம் – கல்வி, இன்றைய நிலை, மனிதநேயம், சூழலியல், பெண்ணியம் வாழ்க்கை, இயற்கை**

1. மகாகவி பாரதியார் – பரம்பொருள் வாழ்த்து .
2. புரட்சிக்கவிஞன் பாரதிதாசன் – தமிழின் இனிமை.
3. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை – கோவில் வழிபாடு.
4. கவிக்கோ. அப்துல்ரகுமான் – பாருக்குள்ளே நல்ல நாடு.
5. சிற்பி பாலசுப்பிரமணியன் – காலம்.
6. கவிஞர் தாமரை – தொலைந்து போனேன்.

KAHE

# 1. பரம்பொருள் வாழ்த்து

முன்னுரை

இந்திய நாடு பலமதங்களும் பல இனங்களும் நிறைந்தது. வேற்றுமையில் ஒற்றுமை என்ற தத்துவம் கொண்டது. ஆனால் அரசியல் காரணத்தாலும் இன்று சாதி வேற்றுமைகளும் மத வேற்றுமைகளும் மக்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்துகின்றன. கடவுள்கள் பெயரால் மதங்கள் ஏற்பட்டிருந்தாலும், கடவுள் என்பது ஒன்றே என்ற உண்மையை இப்பாடலின் மூலம் உணர்த்துகின்றார் சுப்பிரமணிய பாரதியார்.

**சிவம் : 'ஆத்திச் சூடி யிளம்பிறை யணிந்து**
**மோனத் திருக்கு முழுவெண் மேனியான்'** –

என்று முதலில் சிவபெருமானைப் பாரதியார் குறிப்பிடுகிறார். சிவபெருமான் ஆத்திமாலை சூடியிருப்பான். தன் சடை முடியில் இளம் பிறையை அணிந்திருப்பான். இயக்கமற்று மோன நிலையில் வீற்றிருப்பான். உடம்பெல்லாம் பூசியிருப்பதால், அவன் முழுமையும் வெண்ணிற மேனியை உடையவன். இவ்வாறு சிவபெருமானின் தோற்றப் பொலிவை வருணிக்கிறார் பாரதியார். சக்தியில்லாததால் சிவம் மோனத்தில் இருக்கும் நிலை என்கிறார் அவர்.

**திருமால் : 'கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்'** – என்று வைணவத்து முழுமுதற் கடவுளான திருமாலின் தோற்றப் பொலிவை அவர் சித்திரிக்கிறார்.

**அல்லாஹ் : 'முகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்'** – என்று இஸ்லாமிய சமயக் கடவுளின் பெயரைப் பாரதி சொல்லாமல் விளக்குகிறார்.அல்லாஹ் என்று வேறு பாடலில் பாடிய பாரதி இங்கு அந்தச் சொல்லைப் பயன்படுத்தாதற்குக் காரணம் பரம்பொருளுக்கு அரபி மொழியில் அல்லாஹ் என்று பெயர் என்பதையும் அல்லாஹ் என்பது இசுலாமிய சமயத்துக்கு மட்டுமே உரிய கடவுள் இல்லை என்பதையும் பாரதி நன்குணர்ந்த காரணத்தால் முகமது நபிக்கு மறையருள் புரிந்தோன் என்று மட்டும் அவர் சொல்லிச் செல்கிறார்.

**ஏசுவின் தந்தை:** ஏசுவின் தந்தை என்று கிறித்துவ மதக் கடவுளைப் பாரதியார் குறிப்பிடுகிறார். இசுலாமியச் சமயத்தின் கடவுள் பெயர் 'அல்லாஹ்' என்று தெரிந்திருந்தும் அப்பெயரைச் சொல்லாத பாரதியார் கிறித்துவ சமயத்தில் ஏசுவின் தந்தைக்குப் பெயரிடாத காரணத்தால் ஏசுவின் தந்தை என மட்டும் குறிக்கிறார்.

**உருவகப் படைப்புகள்:** இவ்வாறு நால்வகைச் சமயங்களையும் நன்கு அறிந்திருந்து தெளிந்த அறிவுடன் விளக்கும் பாரதியார் பல மதத்தினரும் தத்தம் விருப்பப்படி உருவகம் செய்து கொண்டு கடவுளை உணர்ந்து, உணராமல் பலவகையாக வணங்குகின்றனர். என்றாலும் பரம்பொருள் ஒன்றே என்ற தெளிந்த முடிவினைத் தருகிறார்.

**ஒளியியல்பு:** இவ்வாறு உருவகத்தால் கடவுளைக் குறிப்பிட்டாலும் கடவுளின் இயல்பு ஒன்று உள்ளது என்றும் அதன் இயல்பு ஒளி பொருந்திய அறிவாகும் என்றும் பாரதி கடவுளுக்கு விளக்கம் தருகிறார்.

**அமர வாழ்வு :** அறிவாகிய நிலைதான் கடவுள் என்று கண்டவர்கள் உருவகத்தால் வழிபடுகின்ற செயல்களான அல்லவை அல்லது தகாதவற்றை அகற்றியவர்களாவார்கள் என்கிறார் பாரதியார். உருவ வழிபாட்டை நீக்கிவிட்டாலே தேவையற்றவை அனைத்தையும் அகற்றிவிட்டார்கள் என்று பொருள் எனப் பாரதியார் உறுதி கூறுகிறார்.. இக்கருத்துக்கு வலிமை சேர்க்க வேண்டும் என்பதற்காகவே ' அல்லவை அகற்றினார்' என்று எதிர்காலத்தை இறந்த காலத்தில் அவர் எழுதுகிறார்.

**முடிவுரை :** சிவம், திருமால், அல்லாஹ், இயேசுவின் தந்தை என்று வேறு வேறு பெயரில் கடவுளை வழிபட்டாலும் அப்பெயர்கள் எல்லாமே பரம்பொருள் ஒன்றையே குறிக்கும்.

சைவத்துக்கு ஒரு கடவுள், வைணவத்துக்கு ஒரு கடவுள் முஸ்லிமுக்கு ஒரு கடவுள், கிறித்தவர்க்கு ஒரு கடவுள் என்று தனித்தனிக் கடவுள்கள் இருக்க இயலாது என்ற உண்மையை இப்படலில் உணர்த்துகிறார் பாரதியார்.

## 2. தமிழின் இனிமை

**முன்னுரை:** தமிழுணர்வு மிக்க கவிஞர் பாரதிதாசன். தமிழின் இனிமையைத் தமிழர்களுக்கு உணர்த்தும் விதமாக இனிமையான பொருள்களை இங்குப் பட்டியலிட்டுத் தமிழின் இனிமை என்ற தலைப்பில் இனிமை சொட்டச் சொட்டப் பாடுகிறார்.

**பலாவும் கரும்பும்** : கனி என்பதே சுவயுடையது. அதிலும் அந்தக் கனியில் சுளைகளாக இனிமை ஏறி நிற்கும் போது அதுவும் மேலும் சுவை நிரம்பியதாகிறது. கரும்பே இனிமை அதிலும் முற்றிய கரும்பின் சாறு ஏறி நிற்கும் போது மேலும் இனிமையாகிறது.

**மலரும் பாகும்** : குளிர்ந்த மலரைப் பார்ப்பதே அழகு. அந்த அழகின்மேல் நிரம்பி நிற்கும் தேன் இன்னும் சுவையை மிகுவிக்கிறது. பாகினைக் காய்ச்சும்போது இன்னும் இனிமைச் சுவை ஏறி நிற்கிறது.

**பாலும் நீரும்** : சிறந்த பசு பொழிகின்ற பால் இனியது. தென்னை மரம் நல்கும் குளிர்ந்த இள நீர் இனியது. என்னுயிர் இவையெல்லாம்.

**‘ இனியன என்பேன் எனினும் - தமிழை**

**என்னுயிர் என்பேன் கண்டீர்!**’ என்று இனிமைக்கெல்லாம் உயர்வான உயிர் என்று முடிக்கின்றார் கவிஞர்.

இங்கே கனி என்பதைப் பலாப்பழத்தையுத் கழை என்பது கரும்பையும் குறிக்கின்றன. இவற்றின் இன்பமெல்லாம் உடலுக்கு ஆனால் அந்த உடலில் உள்ள உயிரோ தமிழுக்கு என்று கணக்கு வாய்ப்பாடு தருகிறார் கவிஞர்.

**பொழிலும் புனலும்** : புனலும் பூம்பொழிலில் வண்டுகளின் ஒலியும் ஓடையில் செல்லுகின்ற நீரின் துள்ளல் ஓசையும் நான் விரும்புவன.

**குழலும் வீணையும்** : புல்லாங்குழலில் வெளிப்படும் இசையும் வீணை கொட்டுகின்ற அமுதம் போன்ற பண்ணும் நான் விரும்புவன.

**குழவிகளும் பெண்களும்** : குழந்தைகளின் மழலைப் பேச்சும் பெண்கள் கொஞ்சிடும் இதழ்களின் வாய்ப்பும் எனக்கு மிக விருப்பமானவை.

**உடலுயிர்** : இவற்றையெல்லாம் நான் விழைந்தாலும் ‘தமிழும் - நானும் மெய்யாய் உடலுயிர் கண்டீர் ! என்று தமிழின் இனிமையின் உயர்வை உறுதி செய்கிறார் பாரதிதாசன்.

**உடன்பிறப்பும் உறவும்** : உடன் பழகி வாழ்பவர்கள் அண்ணன் தம்பிமார்கள். அக்கம் பக்கத்தில் வாழ்கின்றவர்கள் உறவு முறைக்காரர்கள்.

**அன்னையும் தந்தையும்** : மிகுந்த கருணையுடையவள் அன்னையாவாள், என்னை எப்போதும் மறவாதவர் தந்தை.

**மனைவியும் பிள்ளையும்** : என்மனைவியோ குயில்போல பேசுபவள், நானும் அவளும் அன்பைக் கொட்டி வளர்த்துக் கொண்டிருக்கிற பிள்ளை ஆகியோர் எனக்கு உண்டு.

**அறிவில் உறைவு** : ஆனால் இவர்கள் எல்லாருமே எனக்கு அயலார்கள் என்று கருதும் வண்ணம் எனக்கு ஓர் உறவு உண்டு அப்படி என் அறிவினில் உறைந்திருக்கும் உறவு தமிழ் என்பதை நீங்கள் அறிவீர்களாக.

**உற்**றார் உறவினர்கள் எல்லாம் தன் உடலுக்கு வெளியேதான் உறைகிறார்கள் எனவும் தமிழ் மட்டுமே தன் உடலுக்குள்ளேயே அறிவில் உறைவதாகவும் அதனால் தமிழ்வேறு தான் வேறு அல்ல என்பதையும் கவிஞர் உணர்த்துகிறார்.

**வானும் ஒளியும்** : நீலச்சுடரின் தெளிவில் பளிச்சென்று இருக்கிறது வானம். அங்கே கடலின்மேல் பார்த்தால் எல்லாம் ஒளியாகக் காட்சியளிக்கிறது.

**மாலையும் மலையும்** : மாலையில் கதிரவனின் சுடரினில் மலைகள் மூழ்குகின்ற அந்தக் காட்சி நல்ல இன்பக்காட்சியாகும்.

**விந்தை** :இவற்றையெல்லாம் உயர்வானவை என்று கவிஞர்கள் எழுதுகிறார்கள். அப்படி எழுதுகின்ற கவிஞர்கள் தமிழின் விந்தையை விளக்கி எழுதும் தகுதியுடையவர்களாக இருக்க இயலுமோ? இயலாது.

இயற்கையழகெல்லாம் தம்மைப் பொன்ற கவிஞர்களால் எழுதமுடியும். ஆனால் தமிழின் விந்தையை யாராலும்எழுத முடியாது. இவ்வாறு செம்மொழியின் பெருமையைப் போற்றுகிறார் பாரதிதாசன்.

**சோறும் கறியும்** : செந்நெல்லை அரிசியாக்கி வேகவைத்துச் சுவையாக்கிய சோறும் பசுவின் நெய்யினால் சமைத்த காய்கறிகளின் வகையும்.

**முதழரையும் மிளகும்** : சுவையில் தனக்குத் தானே நிகர் என்று சொல்ல வல்ல முதிரைத் தானியமும் கட்டித்தயிரோடு மிளகின் சாறும்,

**கிழங்கும் அப்பமும்** : மிகவும் இனிய சுவை பயக்கும் கிழங்கும் கண்டாலே நாவில் இனித்திடுகின்னற அப்பமும்.

இவையெல்லாம் உடலை வளர்க்கும் உணவு வகைகள். ஆனால் உடலோடு தமிழன் என்ற உணர்வை வளர்ப்பதுதான் தமிழ் என்பதை,

**உணர்வு : 'உன்னை வளர்ப்பன தமிழா! – உயிரை**

**உணர்வை வளர்ப்பது தமிழே!'**

என்று வலியுறுத்துகிறார் பாரதிதாசன்.

**முடிவுரை**

தமிழர்கள் தம் வாழ்வில் அனுபவித்த இன்பங்களை விரும்பும் இனிமைகளைப் பட்டியலிட்டு அவற்றையெல்லாம்விட இனிமையில் உயர்வானது தமிழ் என்று எணர்த்த முயல்கிறார் பாரதிதாசன்.



KAHE

## 3. கோவில் வழிபாடு

### முன்னுரை

கவிஞர் கவிமணியின் கோவில் வழிபாடு என்னும் கவிதை இறைவன் உள்ளத்தில் உள்ளான் என்ற உண்மையை உணர்த்தத் தோன்றியதாகும். அது குறித்த கருத்துக்களைப் பின்வருமாறு காணலாம்.

கோவில் முழுதும் சுற்றிப்பார்த்த கவிஞர் கோபுரத்தின் மீது ஏறி இறைவனைத் தேடுகின்றார். தேவர்களுக்கெல்லாம் தேவனாக விளங்கும் இறைவனை அவர் எங்கு தேடியும் கண்டறிய முடியவில்லை . கோவில்ன் தெப்பக் குளத்தினையும் அதனைச் சுற்றியுள்ள தேரோடும் வீதியையும் காணமுடிந்த அவரால் எப்பொழுதும் மறைந்து ஆனால் எல்லாப் பொருளிலும் நீக்கமற நிறைந்து காணப்படும் இறைவனைக் கண்டறிய முடியவில்லை. சிற்ப வேலைப்பாடுடன் கூடிய அழகிய சிலையையும், சித்திர வேலைப்பாடுடன் கூடிய கோபுரத்தையும் பார்க்க முடிந்தும் பல அற்புதங்களைப் புரிகின்ற அத்திருமூர்த்தியினைக் காணமுடியவில்லை.

இறைவனின் திருச்சிற்பத்தில் பூட்டப்பட்டிருந்த மணியையும் காண்கின்றார் கவிஞர் மேலும் வாசைன பொங்கும் பூமாலை அச்சிலையினை மேலும் அழகுபடுத்திக் காட்டினாலும் உண்மையான ஒளிவிளக்காகிய என் அய்யன், என் தந்தை சிவனை இன்னும்கூட தன் கண்களால் காண இயலவில்லை என்று மிகவும் வருந்துகிறார். வாசனை மிகுந்த சாம்பிராணி கொண்டு இறைவனின் சிலைக்கு தூபமிடுதலையும், தீபாராதனை செய்வதையும் காண இயன்றாலும், ஆபத்தில் காத்து அருளுபவனை, தன்னால் அங்கே காண இயலவில்லை. தில்லையில் இறைவனின் திருச்சிற்றம்பலத்தைக் காண முடிந்த அவரால் கல்லையும் கனியுமாறு செய்யும் இறைவனை, இறைவனின் உண்மையான ஒளிதை் தம் கண்களால் காண இயலவில்லை. இவ்விடத்திலெல்லாம் காண முடியாத இறைவன் ஒவ்வொருவரின் உள்ளத்திலும் நிறைந்துள்ளான். இதனை நாம் உணரவேண்டும் என்றும், அவ்வாறு இறைவனைக் காண முடிந்தால் அவன் வசிக்கும் கோயில்களையும் நம் உள்ளங்களிடையே காணமுடியும் என்று தன் தோழிக்குக் கூறுவது போல கவிஞர் இப்பாடல் வரிகளை அமைத்துள்ளார் எனலாம்.

### முடிவுரை

மேற்காண் கவிதை வரிகள் மூலம் மனிதர்களின் உள்ளத்தில் தான் இறைவன் இருக்கிறான் என்பதும், ஆடம்பரங்களில் இறைவன் இல்லை என்பதும் தெளிவாகிறது.

## 5.காலம் - சிற்பி பாலசுப்பிரமணியம்

கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய காலம் என்ற கவிதை உயிரியல், வானவியல் போன்ற அறிவியல் கொள்கைகளின் செறிவாக அமைகின்றது.

**வானவியல் கொள்கைகள்**

"சூரியச் செம்போத்து

உஷ்ண இறகொன்றைப்
பூமியென உதிர்த்தது"

வானியலில் நடந்த மாற்றத்தைக் கவிஞர் மூன்று வரிகளில் எவ்வளவு அழகாக வடித்துக் காட்டிவிட்டார். ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்பு சூரியன் என்ற மிகப் பெரிய நெருப்புக் கோளம், அதனுள் நிகழ்ந்த அதிர்வுகளால் வெடித்துச் சிதறியது. வெடித்துச் சிதறிய துண்டுகள் ஒவ்வொன்றும் சூரியனை மையமாக வைத்துத் திசைக்கு ஒன்றாகச் சென்று இயங்க ஆரம்பித்தன. இப்படி இயங்கிய கோள்களையே சூரிய குடும்பம் என்கிறோம். அந்தக் குடும்பத்தில் ஒன்றுதான் பூமி.

"வெடித்த வாய்களில்
பீறிட்ட வாயுத் தகிப்புகளில்
உறைந்த பனி இடுக்குகளில்
சொரிந்த மழைத் தாரைகளில்
முதல் கடல் அலைப்பில்
புதைந்தும் சிதைந்தும் மறைந்தும் இருந்தோம்.

சூரியனிலிருந்து வெடித்து வந்தமையால் பூமியும் முதலில் ஒரு நெருப்புக் கோளமாகத்தான் இருந்தது. காலம் செல்லச் செல்ல பூமியின் மேற்புறத்தில் நடந்த வேதியியல் மாற்றங்களால், அம்மேற்பகுதி குளிர்ந்து நிலமாக உருமாறியது. நில இடுக்குகளில் பனிப் பாறைகள் உருவெடுத்தன. அப்பாறைகள் சூரிய வெப்பம் பட்டு உருகி பெரும் ஆறுகளாக உருவெடுத்து, அவ்வாறுகள் ஒன்று சேர்ந்து மிகப்பெரிய தண்ணீர் சாம்ராஜ்யமான கடல் தோன்றியது. நீரில்தான் முதன் முதலில் ஜீவராசிகள் உருவாக ஆரம்பித்தன.

**உயிரியல் கொள்கைகள்**

"விசுவ வெளிப் பாழின்
மர்மக் கருப்பையில்
நானும் காலமும்
ஒளிந்திருந்தோம்"

இந்தப் பிரபஞ்ச வெளியில் நிறைந்திருந்த அணுக்களின் சேர்க்கையால்தான், பூமியில் உயிர்கள் உருவாகின என்ற உயிரியல் தத்துவத்தை இவ்வரிகள் எளிமையாக உணர்த்துகின்றன. உயிர்களுக்கு இந்தப் பிரபஞ்சம்தான் கருவறை. தாயின் கருவறையை எந்தக் குழந்தையும் கத்தி கொண்டு கிழிப்பதிலை. ஆனால் மனிதனோ தன்னால் முடிந்தவரை இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள காற்று, நிலம், நீர் போன்ற அனைத்து உயிர் ஆதாரங்களையும் அழிக்கிறான். உயிரியலின் தந்தை சார்லஸ் டார்வினின் பரிணாமக் கோட்பாட்டை மையமிட்ட கொள்கைகளைச் சிற்பி பின்வருமாறு விளக்குகின்றார்.

"உயிரின் பரிமாணப் பயணம்
ஊர்ந்து வர ஊர்ந்து வர
நீந்தி வர நீந்தி வர
பறந்து வர பறந்து வர
இயங்கிய மூல
ஜீவத் துளும்பலில்

தெறித்த திவலை நான்”

டார்வின் உயிர் இயக்கப் பரிணாமத்தை ஊர்வன, பறப்பன என்று இரு வகையாகப் பிரிக்கிறார். நீரில் முதன் முதலில் ஊர்ந்து செல்லும் உயிர் வகையான அமீபா தோற்றம் பெற்றது. அமீபா ஒவ்வொன்றும் பிரிந்து பிரிந்து தானாக இனப்பெருக்கம் செய்யக் கற்றுக்கொண்டன. இப்படிப் படிப்படியாக வளர்ச்சியடைந்த அமீபா போன்ற சிற்றுயிர்களின் அடுத்த பரிணாமமாக மீன்கள் உருவாகின. சில நீர்நிலைகளைக் கூர்ந்து கவனித்தால் அதனுள் உள்ள மீன்கள் செதில்களை விரித்து மேலே துள்ளிப் பறக்க முயற்சிப்பதைக் காணலாம். இப்படிப் பறக்க முயற்சித்த மீன்கள்தான் பறவைகளாக உருவெடுத்தன. அம்மீன்களின் செதில்கள்தான் பறவைகளின் இறகுகளாகப் பரிணாம வளர்ச்சியடைந்தன. இப்படி நீர்வாழ் உயிரினங்களிலிருந்து பறவைகள் தோன்றின.

“தெறித்த திவலை நான்” என்ற கவிஞரின் வரிகள் ஆய்வாளனுக்கு ஆனந்தம் தரக்கூடிய செறிவான வரிகளாகும். நீர் அலைகளிலிருந்து தெறித்து நிலத்தில் விழுந்த நீர்வாழ் உயிரினங்கள்தான் நீலத்தில் ஊர்ந்து செல்லும் உயிர்களாகப் பரிணாம வளர்ச்சி பெற்றன. ஊர்ந்து செல்லும் பல்லி இனங்களிலிருந்து அனுபவம் முற்றியதாக எலி உருவாகிறது. எலிகளின் உட்சபட்ச பரிணாமத் தோற்றம் டைனோசர் ஆகும். நம் சிந்தனைக்கு எட்டா அளவில் பல காலங்களுக்கு முன்பே டைனோசர் இனம் அழிந்துவிட்டது. இப்படி உலகில் தோன்றிய உயிர்களில் இரு வகை உண்டு. 1.முட்டையிட்டுக் குஞ்சுகளை ஈன்று இரைகொடுப்பன, 2.குட்டிகளை ஈன்று பால் கொடுப்பன. இந்த இரண்டாவது வகையான பாலூட்டிகளிலிருந்து தோன்றிய பரிணாமத் தோற்றம்தான் மனிதன்.

“நான்கு கால் ஜீவிகள்
பின் கால் ஊன்றி
முன் கால்கள்
கரங்களாய் நிமிர்ந்து
மூளையைச் சிலிர்த்துக் கொண்டபோது
நான் நானானேன்”

நான்கு கால் ஊன்றி நடந்த குரங்குகள் பின்னங்கால்களை ஊன்றி, முன்னங்கால்களைக் கரங்களாக உயர்த்தி எழுந்து நின்றபோது மனிதன் தோன்றினான். குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற டார்வினின் கோட்பாட்டினைக் கவிஞர் இவ்வரிகளில் அழுத்தமாகப் பதிவு செய்கிறார்.

பூமிப் பந்தில் தோன்றிய ஓரறிவு உயிர்கள் படிப்படியாக வளர்ந்து இரண்டறிவு, மூன்றறிவு, நான்கறிவு, ஐந்தறிவு எனப் பரிணாம வளர்ச்சியடைந்து தற்போது பகுத்தறிவு வளர்ந்த மனிதனாக இருக்கிறான். இந்த வளர்ச்சிக்கு பல்லாயிரக்கணக்கான காலங்களை உலகமும் உயிர்களும் கடந்து வந்திருக்கும். காலத்துடன் தன் கரங்களைக் கோர்த்து உயிர்கள் கடந்துவந்த பாதையில் பல்வேறு அனுபவங்களை அவை அடைந்திருக்கும். காலம் கற்றுக் கொடுத்த அனுபவங்களின் முதிர்ச்சியே மனித அறிவு. ஆகவேதான் கவிஞர்

இக்கவிதைக்குக் காலம் என்று பெயரிட்டுள்ளார். பிரபஞ்சத்தின் மீது கவிஞர் கொண்ட அன்புள்ளம் கவிதையின் கடைசி வரிகளில் வெளிப்படுகின்றன.

"அணுக்களின் பிள்ளை நான்
ஆனதால் புவியின்
எந்தச் சேதமும்
என்னை அழ வைக்கின்றன
எந்த உவகையும்
என்னைத் துள்ளி எழ வைக்கின்றன"

இந்தப் பூமியின் பிள்ளையாக நான் இருப்பதால், அதற்கு ஏற்படுகின்ற ஒவ்வொரு சேதத்தையும் தாங்க முடியாமல் நான் அழுகின்றேன் என்ற கவிஞரின் மொழி, இயற்கையின் மீது பற்று கொண்ட ஒவ்வொரு மனிதனுடைய ஆழமான அழுகையின் வெளிப்பாடாக அமைகின்றது. இயற்கையை மாசுபடுத்தும் மனிதர்களுக்கு இந்த வார்த்தைகள் அகிம்சை எச்சரிக்கையாக அமைகின்றன. குடிக்க நல்ல நீரும், சுவாசிக்க நல்ல காற்றும், உண்ண நல்ல உணவும், இருக்க நல்ல இடமும் இல்லாத அளவிற்குப் பூமியையும் இயற்கை வளங்களையும் அழித்த பிறகு, கூடவே மனிதனும் அழிந்து விடுவான். ஆகவே இயற்கையை அழிக்காத நல்ல மாற்றங்களைப் பூமியில் உருவாக்குவோம்.

# UNIT- 1

## பகுதி: அ

**சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. தமிழ்ப் புதுக்கவிதைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் யார்?

(அ). பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ). கவிமணி (ஈ). அப்துல் ரகுமான்

2. பாரதியாரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட ஆண்டு எது?

(அ). 1947 (ஆ). 1948 (இ). 1949 (ஈ). 1950

3. பாரதிதாசனுக்கு, 'புரட்சிக்கவி' என்று பட்டம் வழங்கியவர் யார்?

(அ). பாரதியார் (ஆ). அறிஞர் அண்ணா (இ). கவிமணி (ஈ). அப்துல் ரகுமான்

4. கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை பிறந்த ஊர் எது?

(அ). பேரூர் (ஆ). தேரூர் (இ). திருப்பூர் (ஈ). திருப்பத்தூர்

5. கோயம்புத்தூர் மாவட்டம் ஆத்துப் பொள்ளாச்சியில் பிறந்த எழுத்தாளர் யார்?

(அ). கவிமணி (ஆ). அப்துல் ரகுமான் (இ). பாரதியார் (ஈ). சிற்பி பாலசுப்பிரமணியம்

6. திருக்குறளின் பொருள்பாலிலுள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை_____.

அ) 25 ஆ) 60 இ)70 ஈ) 45

7. பாரதிதாசன் நடத்திய கவிதை இதழ் _________.

அ) தென்றல் ஆ) கவிதாமண்டலம் இ) குயில் ஈ) கவி

8.அத்திப்பூ மாலையைச் சூடியவர் யார்?

அ) சிவபெருமான் ஆ) திருமால் இ) பிரமன் ஈ) முருகன்

9. புனலிடை வாய்க்கும் கலியும் - இதில் 'கலி' என்பதன் பொருள் என்ன?

அ) கலியுகம் ஆ) துள்ளலோசை இ) இன்பம் ஈ) தமிழ்

10. யாரை நாடு கடத்த வேண்டுமென அப்துல் ரகுமான் கூறுகிறார்?

அ) திருடன் ஆ) கடத்தல்காரன் இ) ஊழல் பேர்வழி ஈ) பிரிவினைவாதி

11. உள்ளத்தில் காண்பாய் எனில் _________ உள்ளேயும் காண்பாயடி.

அ) வாயில் ஆ) கோயில் இ) மதில் ஈ) கோபுரம்

12. இருமுறை சாகித்திய அகாடமி விருது பெற்ற கவிஞர் யார்?

அ) அப்துல்ரகுமான் ஆ) மு.மேத்தாஇ) நாஞ்சில்நாடன் ஈ) சிற்பி பாலசுப்பிரமணியம்

13. கொங்குதமிழ் கோவை தந்த கவிஞர் என்று புகழப்படுபவர் யார்?

அ) கவிஞர் தாமரை ஆ) கவிஞர் நர்மதா இ) கவிஞர் சிற்பி ஈ) கவிஞர் மதியழகன்

14. பாற்கடல் மிசை கிடப்போன் ________.

(அ). சிவன் (ஆ). திருமால் (இ). இந்திரன் (ஈ). முருகன்

15. அண்ணா அவர்களால் புரட்சிக்கவி என்று அழைக்கப்பட்டவர் ________.

(அ). பாரதிதாசன் (ஆ). பாரதியார் (இ). கவிமணி (ஈ). அப்துல்ரகுமான்

## பகுதி: ஆ

**அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளி**

1.'பாரதியார்' - குறிப்பு வரைக.

2.'பாருக்குள்ளே நல்லநாடு' - கவிதையின் மையக்கருத்தைச் சுட்டுக

3.பரம்பொருளின் இயல்பாக பாரதியார் கூறுவன யாவை?

4. இவ்வுலகம் யாரைப் பொருட்படுத்தாது என வள்ளுவர் உரைக்கிறார்?

5.'பலவகையாகப் பரவிடும் பரம்பொருள் ஒன்றே' – இடம்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

## *பகுதி – இ*

***பெருவினாக்கள்: அனைத்து வினாக்களுக்கும் விடையளி:***

1. 'தமிழின் இனிமை' என்னும் கவிதையின் சிறப்புகளைப் பட்டியலிடுக.
2. கவிஞர் தாமரை அவர்கள் குறிப்பிடுகின்ற பெண்ணியச் சிக்கல்களை விவரி.
3. இன்றைய அரசியல் சூழலை கவிக்கோ எவ்வாறு புலப்படுத்துகின்றார்?
4. தொலைந்துபோனேன் கவிதையில் பெண்களின் நிலையை கவிஞர் தாமரை எவ்வாறு காட்சிப்படுத்துகிறார்?
5. பெண்களின் அவலநிலையைக் கவிஞர் தாமரை எங்ஙனம் எடுத்துரைக்கிறார்

# UNIT-2

## SYLLABUS

**அலகு – II : அற இலக்கியம்** : 1. கொன்றை வேந்தன், 2. நீதிநூல், 3. திருக்குறள், 4. பழமொழி நானூறு

1. ஔவையார் – கொன்றை வேந்தன் (1- 50 பாடல்கள்)
   அன்னையும் பிதாவும் – புலையும் கொலையும் களவும் தவிர்
2. வேதநாயகம்பிள்ளை - நீதிநூல் – (5 பாடல்கள்)
   சின்னவோர் பொருள், கடவுளை வருந்தி, எப்புவிகளும், வைத்தவர், ஈன்றவர்
3. திருவள்ளுவர்- திருக்குறள்– பண்புடைமை, வினைத்திட்பம்
4. முன்றுறையரையனார் – பழமொழி நானூறு 5 பாடல்கள்
   உணற்கு இனிய, பரந்த திறலாரை, நெடியது காண்கிலாய், இனி யாரும், உரைசான்ற

# 1. கொன்றைவேந்தன்

**1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்-**

தாய், தந்தையர் கண்கண்ட தெய்வம்

**2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று**

கோவிலுக்குச் சென்று இறைவனைத் தொழுவது மிகவும் நல்லது

**3. இல்லறமல்லது நல்லறமன்று**

இல்லறவாழ்வே மிகவும் நன்மை பயக்கக் கூடியது

**4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்**

பிறருக்கு உதவி செய்யாதோர் பொருளைத் தீயவர் பறித்துக் கொள்வர்

**5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு**

குறைத்து உண்ணுதல் பெண்களுக்கு அழகு தரும்

**6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்**

ஊராரோடு பகைத்துக் கொண்டால் குடும்பம் அழிந்து விடும்

**7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்**

அறிவியலுக்கு ஆதாரமான எண்ணும், இலக்கிய அறிவுக்கு ஆதாரமான எழுத்தும் நமக்குக் கண் போன்றவை

**8. ஏவா மக்கள் மூவா மருந்து**

செய் என்று சொல்லும் முன்பே குறிப்பறிந்து செயலாற்றும் பிள்ளைகள் அம்ருதம் போன்றவர்கள்

**9. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு**

பொறாமைப் பேச்சு வளர்ச்சியை அழிக்கும்

10. **அஃகமும் காசும் சிக்கெனத் தேடு**

சிக்கனமாயிருந்து தான்யத்தையும், செல்வத்தையும் தேட வேண்டும்.

11. **கீழோராயினும் தாழ உரை**

உன்னை விடத் தாழ்ந்தோராயினும் நயமாகப் பேசு

12. **குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை**

பிறர் குற்றங்களையே ஆராய்ந்து கொண்டிருந்தால், சுற்றத்தார் என்று எவருமே இருக்க மாட்டார்கள்

13. **கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்**

பலவானாக இருந்தாலும், கர்வப் பேச்சு பேசாதே

14. **கெடுவது செய்யின் விடுவது கருமம்**

நமக்கு ஒருவர் கெடுதல் செய்தால், அதை அப்படியே விட்டு விடுதலே உயர்ந்த செயல்

15. **கேட்டில் உறுதி கூட்டும் உடைமை**

தாழ்வு வந்த போதும் மனந்தளராது இருப்பதே மீண்டும் எல்லாவற்றையும் சேர்க்கும்

16. **கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி**

கையில் இருக்கும் பொருளை விட உண்மையான செல்வம் கல்வியே ஆகும்

17. **கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி**

தேவையிருக்கும் இடம் சென்று உதவி செய்தலே, ஆட்சி செய்வோர் அறிய வேண்டியது

18. **கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை**

எவரையும் பழித்துக் கொண்டே இருந்தால், அனைவருக்கும் அவன் பகையாளி ஆவான்

19. **சான்றோர் என்கை ஈன்றோட்கு அழகு**

பெற்றோருக்குப் பெருமை, அவர் பிள்ளைகள் சான்றோர் எனப் பாராட்டப்படுவதே

20. **சிவத்தைப் பேணில் தவத்திற்கு அழகு**

தவத்திற்கு அழகு இறை நினைவோடு இருப்பதே

21. **சீரைத்தேடின் ஏரைத் தேடு**

புகழோடு வாழ விரும்பினால், பயிர்த் தொழிலில் ஈடுபட வேண்டும்

22. . **சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்**

எந்த நிலையிலும் கூடி இருத்தலே சுற்றத்திற்கு அழகு.

23. **சூதும் வாதும் வேதனை செய்யும்**

சூதாட்டமும், தேவையில்லாத விவாதமும் துன்பத்தையே தரும்

24. **சை ஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண்**

பொருள் கொடுக்குமளவு இருந்தால், பிறருக்கு உணவிட்டு உண்ண வேண்டும்

25. **சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்**

சோம்பெறிகள் வறுமையில் வாடித் திரிவர்

26. . **தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை**

தந்தை சொல்லெ உயர்ந்த மந்திரம் போலாகும்

27. **தாயிற் சிறந்த ஒரு கோயிலு மில்லை**

தாயே சிறந்த தெய்வமாகும்

28. **திரைகடல் ஓடியும் திரவியம் தேடு**

கடல் கடந்தாவது பொருள் தேட வேண்டும்

29. **தீராக் கோபம் போராய் முடியும்**

கோபம் சீக்கிரமாகப் போய் விட வேண்டும். இல்லையேல் அது சண்டையில் போய் முடியும்

30. **தேடாது அழிக்கின் பாடாய் முடியும்**

பொருளைத் தேடிச் சேர்க்காது, இருப்பதை செலவிட்டுக் கொண்டிருந்தால் துன்பத்தில் முடியும்

31. **தையும் மாசியும் வையகத்து உறங்கு**

தை, மாசி (வெயில் காலம்) மாதங்களில் வைக்கோல் வேய்ந்த வீட்டில் உறங்கு

32. . **தொழுது ஊண் சுவையின் உழுது ஊன் இனிது**

பிறரிடம் வணங்கி அந்த ஊதியத்தில் உண்பதை விட பயிர் செய்து உண்பதே இனிது

33. **தோழனோடும் ஏழைமை பேசேல்**

நெருங்கிய நண்பனிடத்தும் நம் வறுமை பற்றிப் பேசக் கூடாது

34. **நல்இணக்கம் அல்லது அல்லல் படுத்தும்**

நல்லோர் நட்பு இல்லையேல், அல்லல் படுவோம்

35. **நாடு எங்கும் வாழக் கேடு ஒன்றும் இல்லை**

நாடு செழித்திருக்குமானால் எவருக்கும் இன்பமே.

36. **நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை**

சொன்ன சொல் தவறாது இருத்தலே, நிலையான கல்வி கற்றதற்கு அழகு

37. **நீர்அகம் பொருந்திய ஊர்அகத்திரு**

நீர் நிறைந்த ஊரில் வசிக்க வேண்டும்

38. **நுண்ணிய கருமமும் எண்ணித் துணி**

சிறிய கார்யமாக இருந்தாலும், யோசித்து செயல் பட வேண்டும்

39. **நூன் முறை தெரிந்து சீலத் தொழுகு**

நல்ல நூல்களைப் பயின்று, ஒழுக்கத்தோடு நடந்து கொள்

40. **நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் இல்லை**

நமக்குத் தெரியாமல் ஒருவருக்கு வஞ்சனை செய்ய முடியாது.

41. **நேரா நோன்பு சீர் ஆகாது**

மனம் ஒப்பி செய்யாத எந்த விரதமும் சிறப்பாக முடியாது

42. **நைபவர் எனினும் நொய்ய உரையேல்**

சக்தியற்றவர் இடத்தும் மனம் நோகுமாறு பேசக்கூடாது

43. **நோன்பு என்பது கொன்று தின்னாமை**

உயிரைக் கொன்று அதை உண்ணாமல் இருப்பதே விரதமாகும்

44. **பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்**

ஒருவர் புண்ணியம் அவர் அடைந்த விளைச்சலில் தெரியும்

45. **. பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்**

சிறந்த உணவாக இருந்தாலும், காலமறிந்து உண்ண வேண்டும்

46. **பிறன்மனை புகாமை அறம் எனத்தகும்**

அடுத்தவன் மனைவியை விரும்பாததே சிறந்த அறம்

47. **பீரம் பேணில் பாரம் தாங்கும்**

தாய்ப்பாலை ஊட்டி வளர்த்தால், அந்தக் குழந்தை பலம் பெறும், நிர்வாக சுமைகளைத் தாங்கும்

48. **புலையும், கொலையும் களவும் தவிர்**

புலாலுண்ணுதல், கொலை, திருடு இம்மூன்றையும் செய்யாதே

## 2- நீதி நூல்

## ஆசிரியர் : மாயவரம் வேதநாயகம்.

1. பெற்றோரை மறவாதீர்:சிறுபொருள் தந்தவரையும் வாழ்நாள் முற்றும் மனத்தில் நினைக்க வேண்டும் என்பது பெரியோர் திருமொழி. அப்படியானால் நம் உடல், உயிர், வாழ்வு எல்லாம் தந்தருளிய தாய் தந்தையரை மறவாதிருப்பதல்லாமல், செய்யும் கைம்மாறு இல்லை.

2.இரத்தத்தைப் பாலாகத் தந்த தாயை மறவாதீர்:கடவுளைத் தொழுது கருவுற்றுக் கசக்கும் மருந்துண்டு பல துன்பங்கள் அடைந்து பத்துத்திங்கள் சுமந்து பெற்றெடுத்துப் பாலூட்டி வலிமையுடன் வளர்த்த அருமைத் தாயை நெஞ்சமே வணங்குவாயாக!.

3.பெற்றோரையே தெய்வமாகப் போற்றுங்கள்:எல்லா உலகங்களையும் படைத்துக் காக்கும் ஆண்டவனைத் தொழவேண்டுமானால் அம்மையே அப்பா என்று ஒப்புரைத்துத் தொழுவோம். கண்கண்ட தெய்வமாகக் காணப்படும் தாய் தந்தையருக்கு எங்கும் ஒப்பில்லை அவர்கள் திருவடியை நெஞ்சே போற்று!.

4.பெற்றோரைப் போற்றாதவர்கள் நரகத்தில் துன்புறுவர்:வைத்து வளர்த்தவர்க்குப் பூ, நிழல், பழம் நல்காத மரத்தை வெட்டி எரிப்பது போன்று, தாய் தந்தையரை வணங்காத அறிவிலாரை ஆண்டவன் இருள் உலகில் தள்ளி வருத்துவன்.

5.முதுமையிலும் மதித்து நடங்கள்:பெற்றவர்கள் பிள்ளைகள் பொருட்டு அளவிலாத் துன்பம் அடைந்தனர். அத்துன்பத்திற்கு ஈடாக மூன்று உலகமும் கொடுப்பினும் போதா. அவர்கள் தங்கள் மூப்பினாலும், சோர்வினாலும் கடுஞ்சொற்கள் சொல்ல நேர்ந்தால், அச்சொற்களை வெல்லப்பாகென்று கொண்டு அவர்களைப் போற்றிவரல் மக்கட்குக் கடன்.

## 3. திருக்குறள்

### பண்புடைமை

பெருமை முதலிய சிறந்த குணங்களிலிருந்து ஒருவன் வழுவாது நின்று எல்லோரது இயல்புகளையும் அறிந்து ஒத்து ஒழுகும் தன்மையே பண்பாகும். இப்பண்பினை விளக்குவதாக இவ்வதிகாரம் அமைந்துள்ளது.

1. **பண்புடைமையை எய்துதல்**

எல்லோரிடத்தும் எளிமையான தன்மையுடையவராதலின் பண்புடைமை என்னும் நன்னெறியை அடைவது எளிது என்று சொல்லுவர் அறநூலோர். குணங்களால் நிறைந்த தன்மை உடையதாலும், உலகத்தைத் தன்பால் வசீகரிப்பதாலும், தொல்லோர் சென்ற நன்னெறி என்பதாலும் பண்புடைமையை அனைவரும் எளிதில் பின்பற்றி ஒழுகுதல் வேண்டும் என்பதற்காக நூலோர் இங்ஙனம் கூறுகின்றனர்.

2. **பண்புடையராவதற்குரிய காரணம்**

எல்லோரிடத்திலும் அன்புடையவனாய் இருத்தலும் அனைத்து நல் இலக்கணங்களும் உடைய குடியில் பிறந்தவருக்கு உரிய செயல்களை உடையவனாயிருத்தலும் ஆகிய இவ்விரண்டும் பண்புடைமை என்னும் நன்னெறி ஆகும்.

3. **நன்மக்கட் பண்பு உடையவனாதல்**

உயிரோடு பொருந்தாத உடம்பால் ஒத்திருத்தலால் ஒருவன் நன்மக்களுக்கு ஒப்பாக மாட்டான். பொருத்தமான பண்பால் ஒத்திருத்தலே பொருந்துதற்குரிய ஒப்பாகும். எனவே நன்மக்களோடு பெறப்படும் ஒப்பாவது உடம்பினால் ஒத்தல் அன்று.

4. **பண்புடைமை பாராட்டப்படும்**

நீதியையும் அறத்தையும் விரும்புதலும் எல்லோருக்கும் பயன்படுதலுமாகிய நல்லோரினது உயர்ந்த பண்புகளை இவ்வுலகத்தோர் கொண்டாடுவர். எனவே உயர்ந்த பண்புகளைக் கடைபிடித்து ஒழுகுதல் வேண்டும்.

### 5. பண்புடையாரின் சிறப்பு

ஒருவரை விளையாட்டாகப் பழித்துப் பேசுதலும் பேசுபவருக்கு அது துன்பத்தை விளைவிக்கும். ஆதலால், பிறரது இன்ப, துன்பங்களையும் இயல்புகளையும் அறிந்து நடக்கக்கூடிய பண்புடையாரிடத்தில் பகைமை உள்ளபோதும், பண்புகளே காணப்படும். பண்புடையார், இவை இன்னாதவை என்பதை முன்னமேயே அறிந்தவராவார். எனவே அவற்றை ஒருபோதும் செய்ய மாட்டார். இனியவற்றையே செய்வார்.

### 6. பண்புடையாரின் உயர்ச்சி

பண்புடையாரைச் சார்ந்து அமைந்திருப்பதால் உலகம் இடையறாது இயங்கி வருகிறது. அவ்வாறு சார்ந்து இல்லையாயின் உலகமானது மண்ணுள் புகுந்து மறைந்து போகும். எனவே உலகியல் நிலைத்து இயங்குவதற்கு அனைவரும் பண்புடைமையைச் சார்ந்து ஒழுகுதல் வேண்டும்.

### 7. அறிவின் பயனானது மக்கட்பண்பு

நன்மக்கட்கே உரிய நற்பண்பு இல்லாதவர். அரத்தின் கூர்மை போலும் கூரிய அறிவுடையராக இருந்தாலும் ஓரறிவுடைய மரத்திற்கு ஒப்பாகக் கருதப்படுவர். அறிவிற்குப் பயனான மக்கட் பண்பு இல்லையாயின் அறிவும் இல்லாதவர் என்றே கருதப்படுவர்.

### 8. பண்புடையாருக்கு இழுக்காதல்

தம்மோடு நட்பு கொள்ளாது பகைமையே செய்தொழுகுபவர் இடத்திலும் தாம் பண்புடையராக நடந்து கொள்ளாமை அறிவுடையார்க்கு இழுக்காகும். எனவே எத்தகைய தன்மை உடையவருடனும் பகைமை பாராட்டாது பழகுதல் பண்புடைமை ஆகும்.

### 9. பண்பின்மையின் குற்றம்

**பண்பின்மையால்** ஒருவரோடும் கலந்து உரையாடி மகிழும் தன்மை அறியாதவற்கு மிகப் பெரிய உலகமானது பகல்பொழுதிலும் இருள் நிறைந்து காணப்படும். எனவே எல்லோரோடும் கலந்து பழகும் தன்மை அறியாததால் பண்பில்லாதவர்க்கு உலகியல் தெரியாது என்பது பொருளாகும். எனவே அனைவரோடும் கலந்து மகிழ்தலே பண்புடைமையாகும்.

### 10. பண்பில்லாரின் கேடு

பண்பில்லாதவன் தன் முன்வினையால் பெற்ற பெருஞ்செல்வமானது ஒருவருக்கும் பயன்படாது கெடும் என்பது, நல்ல பசுவின் பாலானது வைத்த கலத்தின் குற்றத்தால் சுவையின்றி

கெட்டதைப் போன்றதாகும். உலகின் எல்லாப் பயனையும் பெறுதற்குக் காரணமானது பெருஞ்செல்வம். அப்பெருஞ்செல்வம் பண்பில்லாதவர்க்கும் பிறருக்கும் பயன்படாது போகும்.

## வினைத்திட்பம்

வினையாவது செயல். திண்மையாவது உறுதி. எனவே வினைத்திட்பம் என்பது வினைத்திண்மை. அதாவது வினை உறுதி என்பதாகும். குறிப்பிட்ட செயலை வெற்றிகரமாகச் செய்து முடிப்பவனுக்கு வேண்டிய மனவுறுதியை இவ்வதிகாரம் விளக்குவதாக அமைந்துள்ளது.

**வினைத்திட்பம் என்பதன் விளக்கம்**

ஒரு வினையின் திண்மை, உறுதி என்பது அதனை முடித்தற்கு உரியவனின் மனத்திண்மையே ஆகும். வினை நல்ல முறையில் முடிவதற்குத் துணையாகின்ற படை, அரண், நட்பு முதலானவையும் திண்மைகள் என்று கூறப்பட மாட்டா.

**வினைத்திட்பம் குறித்த கொள்கை**

ஒரு வினையைச் செய்வதற்கு முன்னர் அதற்கு இடையூறு ஏற்படுமாயின் அவ்வினையைச் செய்யாமையும், செய்யும் வினையில் இடையூறு எற்பட்ட வழி அதற்குத் தளராமையும் ஆகிய கொள்கையே நீதி நூல் ஆராயந்த அமைச்சரது கொள்கையாகும்.

**வினை செயலாற்றும் வகை**

இடையூறு ஏற்படுத்துவோருக்கு இடையே இருந்து ஒரு செயலைச் செய்ய வேண்டிய சூழலில் பின்வருமாறு செயல்பட வேண்டும். குறித்த ஒரு செயலை பிறர் அறியாத வண்ணம் முதலில் மறைத்து, பின்னர் பிறருக்குப் புலப்படும் வகையில் செய்து முடிப்பதே வினை செய்யக் கூடிய வகை ஆகும். அதுவே வினைத்திட்பம் ஆகும். அங்ஙனம் இன்றி அவ்வினையானது இடையிலேயே பிறருக்குப் புலப்படுமாயின் செய்பவனுக்குப் பெருந்துன்பத்தைத் தந்து அச்செயலையும் முடக்கும்.

**வினைத்திட்பத்தின் அருமை**

ஒரு வினையை இவ்வாறெல்லாம் செய்து முடிக்கலாம் என வரிசைபட வழி சொல்லுதல் எல்லோருக்கும் எளியதாகும். ஆனால் சொல்லிய வழியில் நின்று அதனை வெற்றியுறச் செய்து முடிப்பது என்பது அனைவருக்கும் அரியவாகும்.

**வினைத்திட்பத்தின் சிறப்பு**

சிந்தனையாலும், செயல் திறனாலும் சிறப்பு பெற்றுப் பிற இலக்கணங்களால் பெருமை பெற்ற அமைச்சரது வினைத்திட்பமானது அரசனுக்குச் செல்வத்தையும், புகழையும் தரக்கூடியதாகும். அரசனாலும் எல்லோராலும் நன்கு மதிக்கப்படக் கூடியதாக அமையும்.

**வினைத்திட்பமுடையவர் எய்தும் பயன்**

ஒரு செயலைச் செய்ய நினைத்தவர் அவ்வினையை முடிப்பதற்குரிய மனவுறுதி உடையவராயிருப்பின், அவர் அடைய எண்ணிய பொருள்கள் எல்லாவற்றையும் அவர் எண்ணியவாறே எய்துவர்.

**வினைத்திட்பம் உடையவரை அறிதல்**

உருண்டு செல்லும் பெரிய தேரின்கண் உள்ள அச்சாணி உருவில் சிறியது. ஆயினும் தேர் ஓட அதுவே அடிப்படை. அதுபோன்று உருவில் எளியவராயினும் எடுத்த காரியத்தில் உறுதியுடன் இருந்து வினையை முடிப்பவர் இவ்வுலகில் உண்டு. ஆதலால் உருவத்தில் சிறுமை கண்டு எவரையும் இகழாது இருத்தல் வேண்டும்.

**வினை செய்யும் வகை**

பலகாலம் ஆராய்ந்து கலக்கமின்றி மனம் தெளிந்து தாம் செய்வதாகத் தேர்ந்தெடுத்துத் துணிந்த செயலை, பின்னர் மனச்சோர்வில்லாமலும் காலம் தாழ்த்தாமலும் செய்து முடிக்க வேண்டும்.

**வினை செய்யும் உறுதி**

ஒரு செயலைச் செய்ய முயலும் பொழுது முதலில் துன்பம் மிக வருமாயினும் அதனைக் கண்டு தளர்தல் கூடாது. அச்செயல் முடிவில் இன்பம் தரும் என்ற நம்பிக்கை வேண்டும். எனவே எச்செயலினையும் மனவுறுதியோடு செய்தல் வேண்டும்.

**வினைத்திட்பம் இல்லாதவரது இழிவு**

ஒரு செயலைச் செய்வதற்குரிய மனவுறுதி இல்லாதவருக்கு அம்மனவுறுதி அல்லாத பொருள், படை, நட்பு, அரண் முதலிய உறுதிபாடுகளெல்லாம் அமைந்தாலும் அவை பயனற்றவையே. மனத்திட்பம் இல்லாத அவரைக் கண்டு உலகிலுள்ள உயர்ந்தோர் மதியார்.

# 4.பழமொழி நானூறு
## கல்வி

குடிப்பதற்கு இனிமையான, உவற்பில்லாத நல்லநீர் கிணற்றைத்தவிர வேறு இடத்தில் இல்லையென்று நினைக்கும் கிணற்றுத்தவளை போல், தாமும் கருதாமல். நாள் முழுவதும் வெறுப்பின்றி இனிதாகப் படித்தலைக் காட்டிலும் அறிஞர்களிடம் பாடம் கேட்டல், ஊன்று கோல் போல் உதவுமாதலால் **"கற்றலைவிட கேட்டலே"** மேல் என்கிறார் முன்றுரையரையனார்.

## அறிவுடைமை

மூங்கிலைப் போன்று நன்கு செழிப்புற்று வளர்ந்த, திரண்ட தோள்களையும், கூரிய வேல்போன்ற கண்களையும் உடைய பெண்ணே பரந்த வானிலே ஒளிவீசிக் கொண்டிருக்கின்ற கதிரவனைக் கையால் மறைக்க இயலுமோ? அதுபோல மிகுந்த அறிவும், ஆற்றலும் கொண்டவர்களை தகாத சொற்களையும், செயல்களையும், பழி பாவங்களையும் அவர்மேல் சுமத்தி , அவர்களின் புகழைக் கெடுக்க இயலுமா?. **"ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்"** என்பது பழமொழி.

## இன்னா செய்யாமை

நெஞ்சே தீங்கின் பயனை அடைவதற்கு நீண்ட நாட்கள் ஆகும் என்ற எண்ணத்தை உள்ளத்திலிருந்த அகற்றினால் அதன் பயனை உடனே அடைவாய். ஆகவே யாருக்கும், எவ்வுயிர்க்கும் தீங்கு செய்ய நினைப்பதைவிடுத்து நன்மை செய்யப்பழகுவாயெனில் அதுவே சாலச்சிறந்தது.இதில் **"முற்பகல் செய்யின் பிற்பகல்விளையும்"** என்பது பழமொழி.

## கீழோர் வாழ்க்கை

மலையினின்றும் விழுகின்ற ஒளிவிளங்கும் அருவியை உடைய மலைநாடனே, புகழ்நிறைந்த குடியில் பிறந்த அறிவு நிறைந்தவர்கள் வறுமையில் வாடிநிற்க, நல்ல பண்பும், நன்னடத்தையும் இல்லா கீழோர் செல்வத்தால் பெருகிநிற்பது, மிதக்க வேண்டிய சுரக்காய் நீரில் மூழ்கி இருப்பதும், மூழ்கி இருக்கவேண்டிய அம்மி மிதந்து கொண்டிருப்பதற்கும் ஒப்பாகும் என்கிறார். இதில், **'சுரை ஆழ அம்மி மிதப்ப'** என்பது பழமொழி.

## முயற்சி

விருப்பத்துடன் செய்யப்படும் செயல் விரைவில் நிறைவுபெரும் ஆதலால் அதன் பயனையும் உடனடியாகப் பெறமுடியும். ஆகவே முயற்சியே உரிய செல்வத்தைச் சேர்க்கும் என்கிறார். இதில் **'முனிவில்லார் முன்னியது எய்தாமை யில்'** என்பது பழமொழி.

# UNIT -2

## பகுதி: அ

**சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. ‘அசதிக்கோவை’ நூலின் ஆசிரியர் யார்?

அ). ஔவையார் ஆ). திருவள்ளுவர் இ). வேதநாயகம்பிள்ளை ஈ).முன்றுறையரையனார்

2. சீரைத் தேடின் .........ஐ தேடு.

அ). பொருள் ஆ). ஏர் இ). திரவியம் ஈ). பணம்

3. திருக்குறளின் அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள்.....................

அ). 25 ஆ). 28 இ). 35 ஈ). 38

4. ‘ஈ’ என்பதன் பொருள்________.

அ). செல்வம் ஆ). கொடு இ). பெறு ஈ). வாழ்த்து

5. “வினை ” என்பதன் பொருள் யாது?

அ). காரியம் ஆ). வலிமை இ). செயல் ஈ). திறமை

6. நாலடியாரோடு நெருங்கிய தொடர்புடைய நூலினை குறிப்பிடுக.

அ). திருக்குறள் ஆ). நீதி நூல் இ). கொன்றை வேந்தன் ஈ). பழமொழி நானூறு

7. ஞானக்குறள் எனும் நூலின் ஆசிரியர்_____.

அ) திருவள்ளுவர் ஆ) ஔவையார் இ)கபிலர் ஈ) அதிவீரராமப்பண்டிதர்

8. மக்கட்பண்பில்லாதவர் எதற்கு ஒப்பானவர் எனத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்?

அ) பாறை ஆ) கல் இ) தீயமரம் ஈ) நாய்

9. நீதிநூல்களுள் காலத்தால் முற்பட்டது________.

அ) பழமொழி நானூறு ஆ) திருக்குறள் இ) கொன்றைவேந்தன் ஈ) மூதுரை

10. அறநெறி கூறும் நீதி நூல்களுள் காலத்தால் முற்பட்டது எது?

அ) ஆத்திசூடி ஆ) திருக்குறள் இ) நீதி நூல் ஈ) கொன்றை வேந்தன்

11. வினைத்திட்பம் என்பது ஒருவனின் ________________.

அ). செயல் திட்பம் ஆ). மனத்திட்பம் இ). உடற்திட்பம் ஈ). சொற்திட்பம்

12. பழமொழிநானூறின் ஆசிரியர் யார்?

அ). திருவள்ளுவர் ஆ). பாரதியார் இ). முன்றுறையரையனார் ஈ). சமணமுனிவர்கள்

## *பகுதி – ஆ*

***அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளி:***

1. ‘எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்’ - இடம்சுட்டிப் பொருள் தருக.
2. ‘ஞாயிற்றைக் கைமறைப்பார் இல்’ – பழமொழிக்கு விளக்கம் தருக.
3. இவ்வுலகம் யாரைப் பொருட்படுத்தாது என வள்ளுவர் உரைக்கிறார்?
4. ‘சீரைத் தேடின் ஏரைத்தேடு’ - பொருள் தருக.
5. ‘உருவுகண்டு எள்ளாமை வேண்டும்’ – குறளின் பொருள் விளக்கம் தருக.

## *பகுதி – இ*

***பெருவினாக்கள்: அனைத்து வினாக்களுக்கும் விடையளி:***

1. வினைத்திட்பத்தின் இன்றியமையாமையைத் தொகுத்துரைக்க.
2. ஔவையார் கூறும் நீதிக்கருத்துகளை, கொன்றைவேந்தன் வழி புலப்படுத்துக.
3. பண்புடைமை அதிகாரக் கருத்துகளைத் தொகுத்தெழுதுக?
4. தாய்த் தந்தையரை எவ்வாறெல்லாம் பேணிப்போற்ற வேண்டுமென வேதநாயகம் பிள்ளை வலியுறுத்துகின்றார்?
5. கொன்றைவேந்தன் கூறும் நீதிக்கருத்துகளை எடுத்துரைக்க.

# UNIT-III

## SYLLABUS

**அலகு - III : சிற்றிலக்கியம் : 1. முக்கூடற் பள்ளு, 2. நந்தி கலம்பகம், 3. மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது,**

## அலகு – III : சிற்றிலக்கியம்: (15 மணிநேரம்)

1. முக்கூடற் பள்ளு- 2 பாடல்கள் - சித்திரக் காலிவாலான் (நெல்வகைகள்)
   குற்றாலத் திரிகூட மால்வரை (மீன் வகைகள்)
2. நந்தி கலம்பகம்- 5 பாடல்கள்- என்னையே புகழ்ந்தேன், பதிதொறு புயல்பொழி, இந்தப்புவியில், அடிவிளக்கும் துகில், வானுறுமதியை
3. மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது –தமிழின் சிறப்பு
   பாடியருள பத்துப்பாட்டும்-விளம்பக்கேள்.

## 1. முக்கூடற் பள்ளு – நெல் வகைகள்

சித்திரக் காலிவாலான், சிறைமீட்டான், மணல்வாரி, செஞ்சம்பா, கருஞ்சூரை, சீரகச்சம்பா, முத்து விளங்கி, மலைமுண்டன், பொற்பாளை, நெடுமூக்கன், அரிக்கிராவி, மூங்கிற் சம்பா, கத்தூரி, வாணான், கடைக்கழுத்தன், இரங்கள் மீட்டான், கல்லுண்டை, பூம்பாளை, பாற்கடுக்கன், வெள்ளை, புத்தன், கருங்குறுவை, புனுகுச் சம்பா ஆகிய வித்து வகைகளையெல்லாம் இரண்டு பூவுக்கும் காணுமளவுக்குத் தொகுத்து விதைச் சேரில் போட்டிருக்கிறேன் பண்ணையாரே.

## முக்கூடற் பள்ளு – மீன் வகைகள்

குற்றாலத்தைத் தன்னிடத்தே கொண்ட திரிகூடமாகிய பெரிய மலை முகடுகளில், மேகங்கள் சென்று படிந்து பொழிந்து, மழை நீரானது ஒன்று சேர்ந்து, பொருநை நதியோடு சேர்தலை விரும்பி, முக்கூடற் பதியை வலங்கொண்டு வரும்.

நீர் வற்றுதல் இல்லாத மடுக்களில் பரவை, குரவை, வாளை, கோளை, தேளி, மயிந்தி, உழுவை, அயிந்தி, கூனி, மணலி, ஆறால், ஓராமீன், பிடிக்கவே முடியாத அயிரை, கெண்டை, கெளிறு, பெரிய வரால்கள் ஆகியவை பலவும் கிடைக்கும். அவை எல்லாம் புதுவெள்ளம் வரவும் எதிரேறிச் சென்று அணையிலே பாயும். அங்கிருந்து கால்வாய்களிலே பாயும். பின்னர், குளத்திலே பாய்ந்து வயல்களில் எல்லாம் பாயும். இத்தகைய வளமுடையது சிற்றாறு.

அது சிற்றாறு என்பதொரு பெயரினைப் பெற்றிருந்தாலும்கூட, ஒப்பற்ற சிறிய உருவத்தையுடைய வாமனரின் பெருமையைப் போல்வதாகும். பள்ளியர்களே! அந்தச் சித்திராநதி பெருகிவருகின்ற அழகினைப் பாருங்கள்.

## 2. நந்திக் கலம்பகம்

**நந்தி மன்னன் வீரம்**

ஊர்தோறும் மேகங்கள் சொரிகின்ற மணிகளையும் மூங்கில்கள் தந்த பெரிய முத்துக்களையும் கொடுத்து, அவ்வூர்களில் உள்ள நெற்கதிரைத் தொகுத்துக் கொண்டு வருகின்ற நீர், கரையோடு மோதி வழியும் காவிரியின் வளம் பொருந்திய நாட்டையுடையவனே! செல்வத்தைத் தருகின்ற குடையும், நிலமகள் உரிமையும் ஆகிய இவற்றையுடைய நந்திமன்னனே! அறிவில்லாதவரான அரசர் உன்னுடைய தாமரை மலர்போன்ற திருவடிகளை வணங்காதவராகித் தேவர் உலகத்தை ஆள்பவராவர்.

**நந்தி மன்னன் கொடைப் பெருமை**

புலவர்கள் நந்தி மன்னனை நாடி வருகின்றனர். அவன் புகழைப்பாடி பெரும் பரிசில்களைப் பெறுகின்றனர். பரிசிலைப் பெற்ற அப்புலவர்கள் பெரிய செல்வராகி மன்னராக மாறிவிட்டனர். எனவே இரவலர்கள் அங்கு

இல்லை. இனி இந்த மண்ணுலகில் இரவலர்கள் உண்டென்றால் அவை குமுதமாகிய அல்லி மலர்களே ஆகும். ஏனெனில் அவை மட்டும் இரவில் அலர்கின்றன(மலர்கின்றன).

**நந்தியின் நாட்டில் முத்துச் சிறப்பு**

நந்திவர்மன் நாட்டில் மகளிர் காலில் அணிந்துள்ள சிலம்புகளில் முத்துக்கள் விளங்கித் திகழும். அவர்கள் மேலாடைமீதும் மாலையாகச் செய்து அணிந்திருப்பதும் முத்துக்களே ஆகும். முத்துக்கள் குவியல் குவியலாக வேடுகளில் குவித்து வைக்கப்பட்டிருக்கும். அவற்றின் ஒளி விளக்கேற்றி வைத்திருப்பது போல் தோன்றும். போர்க் களத்திலும், படைவீடுகளிலும் இம்முத்துக்களே ஒளிவீசித் திகழ்கின்றன.

**கையறுநிலை**

நந்திவர்மனே! உன் முக அழகு நிலவை அடைந்து விட்டது. உன் புகழ் கடலில் மூழ்கி விட்டது. உன் வீரமோ புலியிடம் புகுந்து விட்டது. உன் கரங்களின் கொடை கற்பக மரத்திடம் சேர்ந்து விட்டது. உன் நாட்டின் திருமகள் திருமாலிடம் புகுந்து விட்டாள். உன் உடல் செந்நிற நெருப்பை அடைந்தது. எல்லாமே உன்னை விட்டு அகன்று விட்டன. எனவே நீயே இல்லை எனும் போது நானும் என் வறுமையும் எவ்விடம் போவது!.

## 3. மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடு தூது

**தமிழின் சிறப்பு**

திருமுருகாற்றுப்படை முதலாக மலைபடுகடாம் ஈறாக அமைந்த பத்துப்பாட்டு நூல்களும், நற்றிணை முதலாகப் புறநானூறு இறுதியாக அமைந்துள்ள எட்டுத்தொகை நூல்களும், குற்றமில்லாது அறங்களைக் கூறும் நாலடியார், கார்நாற்பது, களவழி நாற்பது முதலிய பதினெட்டு நூல்களும், இளஞ்சூரியர், முதுசூரியர் என்னும் இரட்டைப்புலவர்கள் பொன்மாலைகளால் மாதைநாதர் மீது பாடிய திருவாமாத்தூர்க் கலம்பகமும், மூன்று படைகளோடு கலிங்கத்தின்மீது போர்தொடுத்து ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனைப் பாடிய கலிங்கத்துப்பரணியும், புகார் நகரில் இரண்டாம் இராசராச சோழனிடம் ஒவ்வொரு கண்ணிக்கும் ஓராயிரம் பொன் பரிசில் பெற்ற ஒட்டக்கூத்தர் பாடிய இராசராச சோழன் உலாவும், குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழும், பேரறிவுடைய சான்றோர், தேவாரம் முதலிய நூல்களாகிய மெய்காப்பாளர் காக்க, மனத்தே வீரம் செறிந்து தீவினை நீங்கச் செயல் செய்து வரும் கவிதையாம் மன்னனே(தமிழ்).

தமிழே! உனக்குத் தலைமைப் பேறு அளித்தால், உமக்கு ஒப்பாவர் ஒருவருமிலர். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களும் வயலின் வரப்புகளாகவும், துறை, தாழிசை, விருத்தம் என்னும் பாவினங்கள் மடைகளாகவும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நாற்கரணங்களையும் நல்ல ஏர்களாகவும் கொண்டு சொல்லேருழவர் உழவு செய்ய, வைதருப்பம், கௌடம்,

பாஞ்சாலம், மாகதம் ஆகிய செய்யுள் நன்னெறிகளே விதைகளாக அறம், பொருள், இன்பம், வீடு ஆகியன விளைபொருள்களாயின. இப்பயிர்களின் இடையே வளரும் களைகளாகிய போலிப் புலவர்களின் கூட்டம் பெருகாமல் குட்டுவதற்கு அதிவீரராம பாண்டியனும், செவியை அறுப்பதற்கு வில்லிப்புத்தூரனும், தலையை வெட்டுவதற்கு ஒட்டக்கூத்தனும் இருந்தமையால், தமிழே! நீ கிளைத்துச் செழித்து வளர்ந்தாய்.

தமிழே! பால், முந்திரி, வாழை, கரும்பு, இளநீர் போல் பல்வகையான சுவைகளைத் தருகின்றாய். தெளிந்த அமுதமாகவும், மேன்மையான வீடுபேற்றை அளிக்கும் கனியாகவும், அறிவினால் உண்ணப்படும் தேனாகவும் விளங்கும் தமிழே! உம்மிடத்தில் மகிழ்ந்து உரைக்கும் ஒரு விண்ணப்பம் உண்டு கேட்பாயாக.

KAHE

# UNIT – 3

## பகுதி: அ

**சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. யாருடைய காலத்தைச் சிற்றிலக்கியக் காலம் என்று கூறுவர்?

அ) பாண்டியர் ஆ) சோழர் இ) பல்லவர் ஈ) நாயக்கர்

2. கலம்பக இலக்கியத்தில் பாடப்படும் உறுப்புகள் எத்தனை?

அ) ஆறு ஆ) பன்னிரண்டு இ) பதினெட்டு ஈ) தொண்ணூற்றாறு

3. போலிப்புலவர்களின் செவியை அறுப்பவர் யார்?

அ) பிள்ளைப்பாண்டியன் ஆ) வில்லிப்புத்தூரார் இ) ஒட்டக்கூத்தர் ஈ) நக்கீரர்

4. பலா தழைக்கத் தமிழ் பாடிய புலவர் யார்?

அ) கம்பர் ஆ) அபிராமி பட்டர் இ) ஔவையார் ஈ) பத்திரகிரியார்

5. முக்கூடற்பள்ளு நூலின் பாட்டுடைத் தலைவன் யார்?

அ) பள்ளன் ஆ) திருமால் இ) சிவபெருமான் ஈ) பண்ணையார்

6. நந்திக் கலம்பகம் எந்த நூற்றாண்டைச் சார்ந்தது?

அ) கி.பி. 2 ஆ) கி.பி. 5 இ) கி.பி. 7 ஈ) கி.பி. 9

7. போலிப்புலவர்களின் தலையில் குட்டுபவர் யார்?

அ) பிள்ளைப்பாண்டியன் ஆ) வில்லிப்புத்தூரார் இ) ஒட்டக்கூத்தர் ஈ) நக்கீரர்

8. ”தொடுக்கும் கடவுள் பழம் பாடல்” என்ற பாடலடியைப் பாடியவர் யார்?

அ) குமரகுருபரர் ஆ) அபிராமி பட்டர் இ) ஔவையார் ஈ) பத்திரகிரியார்

9. முக்கூடற்பள்ளு குறிப்பிடும் பிடிக்கவே முடியாத மீன் எது?

அ) கெண்டை ஆ) கெளிறு இ) அயிரை ஈ) அயிந்தி

10. சிற்றிலக்கியங்களின் வகைகள் எத்தனை?

அ) 90 ஆ) 93 இ) 96 ஈ) 99

12. காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மன்னன் யார்?

அ) பல்லவர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) நாயக்கர்

13. முக்கூடற் பள்ளு இலக்கியத்தின் ஆசிரியர் யார்?

அ)ஔவையார் ஆ) திருவள்ளுவர் (இ) முன்றுறைஅரையனார் ஈ) என்னாயினாப்புலவர்

14. பலவகைப் பொருள்களைப் பற்றிப் பலவகைப் பாடல்களைக் கலந்து பாடப்பெறும் நூல்?

அ) பள்ளு ஆ) கலம்பகம் இ) உலா ஈ) மடல்

15. திருநெல்வேலிப் பேச்சு வழக்கு இடம்பெற்ற நூல் எது?

அ) தமிழ்விடுதூது ஆ) நந்திக்கலம்பகம் இ) முக்கூடற்பள்ளு ஈ) தமிழலங்காரம்

**பகுதி: ஆ**

**அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளி**

1. சிற்றிலக்கியம் – குறிப்பு வரைக.
2. நந்தி மன்னனின் கொடைப் பெருமையைக் கூறுக.
3. நந்தியின் நாட்டில் முத்துக்கள் எதற்கெல்லாம் பயன்படுகின்றன?
4. முக்கூடற்பள்ளு கூறும் மீன் வகைகளைக் குறிப்பிடுக.

**பகுதி – இ**

**பெருவினாக்கள்: அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**

1. தமிழ்விடுதூது கூறும் தமிழின் சிறப்பைக் கட்டுரைக்க.
2. நந்தி மன்னனின் பெருமைகள் குறித்து கட்டுரைக்க.
3. மதுரை மீனாட்சியம்மையின் தாலப்பருவம், முத்தப்பருவ செய்திகளை விளக்கியுரைக்க.
4. முக்கூடற் பள்ளு குறிப்பிடும் நெல் மற்றும் மீன் வகைகளைச் சுட்டுக.

## UNIT-IV

## SYLLABUS

**அலகு – IV : சிறுகதைகள் :** 1. மகாமசானம், 2. அப்பாவின் வேஷ்டி 3. அந்நியர்கள், 4. இந்நாட்டு மன்னர்கள், 5.இருவர் கண்ட ஒரே கனவு

| | | |
|---|---|---|
| 1. மகாமசானம் | – | புதுமைப்பித்தன் |
| 2. அப்பாவின் வேஷ்டி | – | பிரபஞ்சன் |
| 3. அந்நியர்கள் | – | ஆர். சூடாமணி |
| 4. இந்நாட்டுமன்னர் | – | நாஞ்சில்நாடன் |



KAHE

## 1. மகாமசானம்

**மானுட வாழ்வில் மனிதநேயம்**

வாழ்க்கை என்பது தன்னிடம் உள்ளதைப் பிறருக்குக் கொடுப்பது அடுத்தவரிடமிருந்து எதையும் எடுப்பது அன்று"என்றார் பிரெஞ்சுப் படைப்பாளி விக்டர் யூகோ, ஆனால் இரக்கமில்லாத உறவுகளால் கைவிடப்பட்ட ஏழைகளின் வாழ்க்கையை இந்த உலகத்தில் யாரும் கண்டு கொள்வதே இல்லை என்பதே கசப்பான உண்மை.

'நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடும் கோயில் பரமர்க்கு அங்கு ஆகுமே'

என்பது திருமந்திரம்.

படங்களும் ஓவியங்களும் நிறைந்த மாடங்களை உடைய கோயிலின் இருக்கும் இறைவனுக்கு நாம் ஒரு பொருளைக் காணிக்கையாகத் தந்தால், அதுநடமாடும் கடவுள்களான ஏழைகளைப் போய்ச்சேராது.

ஆனால், நடமாடும் ஏழைகளுக்கு நாம் ஒன்று கொடுத்தால், அது படமாகும் கோயிலில் இருக்கும் இறைவனுக்கு நிச்சயம் போய்ச்சேரும், என்பதே அதன்கருத்து.

**இன்றைய உலகில் மனிதநேயம்**

இந்த இயந்திர உலகத்தில் பசிப்பிணியைப் பற்றியும், பட்டினியால் அவதியுறும் கடைக்கோடி மனிதர்களைப் பற்றியும் சிந்திப்பதற்கு யாரும் இல்லை.

சகமனிதன்படும் துன்பத்தை கண்டு இரங்கும் மனிதனைத் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டும். இப்படி ஒரு அவலநிலை, மனிதர்கள் தம்மையொத்த மனிதர்களிடத்தில் மனிதநேயத்தோடு நடந்து கொள்ளாமல் இதைத்தான் பாரதி சொன்னான்.

'சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல்கண்டும்
சிந்தையிரங்காரடி கிளியே – செம்மை மறந்தாரடி'

**மகாமசானம் சிறுகதையில் மனிதநேயம்**

ஒருபரப்பரப்பான வாழ்க்கையை நகரின் மத்தியப்பகுதியில் போக்குவரத்து மிகுந்த ஷன நெருக்கடியான இடத்தில், நலிவுற்ற மனிதர்களின் வாழ்க்கை எப்படியிருந்து என்று படம்பிடித்துக் காட்டுகிறார் புதுமைப்பித்தன்.

.....அப்போது அவன் ரஸ்தாவின் ஓரத்தில் உள்ள நடைபாதையில் படுத்துச் சாவகாசமாகச் செத்துக் கொண்டிருந்தான். சாவதற்கு நல்ல இடம் (சாவதற்குக் கூட நல்ல இடம்)சுகமான மரநிழல் வெக்கை தணிந்து அஸ்தமனமாகி வரும் "ஷேஷே" என்ற ஷன இயக்கம். ராஷ கோலாகலம் என்று தான் சொல்ல வேண்டும்

அப்போது அவன் செத்துக் கொண்டிருந்தான். சாவகாசமாகச் செத்துக் கொண்டிருந்தான். ஷனங்கள் அவ்வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தெரியாது சிலர் தெரிந்து கொள்ள விரும்பவில்லை. அந்தக் கிழட்டு துலுக்கப்பிச்சைக்காரன் தாடி மிகவும் நரைத்துவிட்டது. மேலே அழுக்குப் பிடித்த கந்தை, கையையும் காலையும் மூப்பு போஸனமின்மை (தொடர்ந்துபட்டினி) இரண்டும் சேர்ந்து சூம்ப வைத்துவிட்டன. கால்காய்ந்து போனதால். வறுமை எப்படி இருக்கும் பிச்சைக்காரனின் தோற்றம் எப்படி இருக்கும் என்பதை காட்சிப்படுத்துகிறார் .

ஒருமனிதனின் வாழ்கை எப்படியெல்லாம் இருக்கிறது என்று காட்சிப்படுத்துகிறார். புதுமைப்பித்தன் இந்தப்பரபரப்பான உலகத்தில் செத்துக்கொண்டிருக்கும் ஒருவனை கவனிக்க நேரமில்லாமல் ஷனங்கள் ஓடிக்கொண்டேயிருக்கிறார்கள்.

'மகாமசானம்' என்றும் இந்தச்சிறுகதை புதுமைப்பித்தனின் படைப்புகளில் அவலச்சுவையை கட்ட அழகுபட நேர்த்தியாக, படிக்கிறவன் கதைக்குள் மூழ்கிக் கண்ணீர் வடிக்கவைக்கும் ஒருபண்பட்ட படைப்புஎன்று சொல்லவேண்டும்.

'புதுமைப்பித்தன் பார்த்திருக்கிறார் அந்ததப் பிச்சைக்காரன் சாவதை. குழந்தையை எதையும் கவனிக்காமல் ஓடிக்கொண்டியிருக்கும் மனிதர்களை காலகாலமாக சகமனிதனை மதிக்காத நேசிக்காத மனிதநேயம்மற்ற வாழ்க்கையை, இந்த யாதார்த்தத்தைப் பதிவுசெய்து அறுபது ஆண்டுகளுக்கு பிறகும் கூட நம்மை ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டும் கதைக்களம் அவருக்கு மட்டும் எப்படிசாத்தயமானது.

புதுமைப்பித்தன் படைப்புகளைப் பற்றி பேசும் ரா.ஸ்ரீ.தேசிகன்."ஒரு கவியுள்ளம் சோகத்தினால் சாம்பிய கவியுள்ளோம் வாழ்க்கை முட்களில் விழுந்து இரத்தம் கக்குகிற உள்ளம் கதைகள் மூலம்பேசுகிறது" என்று குறிப்பிடுகிறார்.(புதுமைப்பித்தன் படைப்புகள்).

கலைஞன் இறந்து பட்டாலும் அவன் படைப்புகள் வாழ்ந்துகொண்டே இருக்கின்றன. என்பது மறுக்க முடியாத உண்மை. புதுமைப்பித்தனின் சிறுகதைத்

தலைப்பிலேயே ஒருபுரட்சி ஏற்படுத்தியிருக்கிறார். ஆனந்தவிகடன் சித்தரஅகராதி மாசனம் என்பதற்கு மயானம், சுடலை என்று பொருள் தருகிறது. அப்படி என்றால்‘ மகாசானம், என்பதற்கு மிகப்பெரிய சுடுகாடுஎன்று அர்த்தமா? யாருக்குத் தெரியும். புண்ணித் தலமாக வணங்கப்படவேண்டிய ஒருமாநகரம், மனிதத்துவம் இல்லாத மனிதர்களின் ஈவுஇரக்கமற்ற குணத்தினால் இப்படி மயானமாகிப் போய்விட்டது. என்று உருவகப்படுத்தி இருப்பார் என்று எடுத்துக்கொள்ளலாமா? எழுதுவதில் புதுமை எழுத்தில் புரட்சி என்று முத்திரை படைத்ததனால் தானே புதுமைப்பித்தன் என்று அழைக்கப்பட்டாரோ. புதுமைப்பித்தன், ஒவ்வொருவரும் உச்சிமுகர்ந்து பாரட்டப்பட வேண்டிய உன்னதக் கலைஞன்.

## 2. அப்பாவின் வேஷ்டி

### பிரபஞ்சன் கதைகளில் தந்தை - மகன் உறவு

பிரபஞ்சன் காட்டும் தந்தை மகன் உறவு ஓர் ஆழமான பாச உறவாக அமைந்துள்ளது. இவ்வுறவு குறித்ததாக அமைந்திருக்கும் எல்லாக் கதைகளிலும் தந்தையைப் பற்றி உயர்வாகவே கூறப்பட்டுள்ளன. எந்தச் சூழ்நிலையிலும் மகனைப் பற்றித் தவறான எண்ணம் கொண்ட தந்தையர்கள் கதைகளில் காட்டப் பெறவில்லை. மகன் மீது அளவுகடந்த பாசம் உடையவர்களாகவும், அவர்களை எந்தச் சூழ்நிலையிலும் ஊக்கப்படுத்துபவர்களாகவும் வருகின்றனர். அதேபோல பல கதைகளிலும் மகன் தந்தைமேல் அளவுகடந்த அன்புள்ளம் கொண்டவனாக இருந்தாலும், சில கதைகளில் தந்தையை ஒதுக்கி வைத்திருக்கும் தன்மையோடும் இருக்கிறான். தந்தை என்னும் பாத்திரத்தை எல்லாக் கதைகளிலும் உயர்வாகப் படைத்ததற்குக் காரணம், தன் தந்தைமேல் கொண்ட மதிப்பும், மரியாதையும் தான் என்று பிரபஞ்சன் கூறியுள்ளார். அவருடைய அப்பா நல்ல நண்பராக நண்பர்களிடத்தில் மட்டுமல்ல தன்னிடத்திலும் அவ்வாறு நடந்து கொண்ட விதத்தினால் தான், இவ்வாறு அவரை எழுதத் தூண்டியது என்று கூறுகின்றார். இதனை அவருடைய சிறுகதைகள் தொகுப்பின் முன்னுரையில், என் அப்பாதான் எனக்கு ஆதர்சம். மிகவும் மேன்மையான மனிதர் அவர். இத்தகைய தன்மையினால் தான், அவர் தன்னுடைய கதைகளில் வரும் தந்தைக் கதாபாத்திரங்களை,

தோழமை உறவுகொண்ட பாத்திரங்களாகச் சித்திரித்துள்ளார் எனலாம். விழுது, அப்பாவின் வேஷ்டி, அடி, தியாகி, அந்த மனிதர், தந்தையும் மகனும் போன்ற சிறுகதைகள் தந்தைக்கும் மகனுக்குமுள்ள உறவினைப் பற்றி அமைந்துள்ளன.

**அப்பாவின் வேஷ்டி சிறுகதையில் தந்தை மகன் உறவு**

இவற்றுள் அப்பாவின் வேஷ்டி என்னும் சிறுகதை அப்பாவின் மீது கொண்ட பாசத்தின் காரணமாக அவருடைய வேஷ்டியை நினைவாக வைத்திருக்கும் மகனின் செயலைக் கூறுவதாக அமைந்துள்ளது. அவருடைய அப்பா இறந்தாலும், அவருடைய நினைவுகளோடு வாழும் மகனைச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அப்பா வேஷ்டியைக் கட்டிகொண்டு வெளியே வருவார். அடடா... நெருப்பைச் சுற்றிக்கொண்டு வருவதுபோல் அல்லவா இருக்கும். அந்த வேஷ்டியில் தான் அப்பா எவ்வளவு அழகாகத் தெரிந்தார். அவரால் அந்த வேஷ்டிக்கு மகிமையா, அல்லது அந்த வேஷ்டியாலா? அப்பாவை அப்போது கட்டிக்கொள்ள வேண்டும் போல் இருக்கும். கட்டிக் கொள்வேன். பச்சைக் கற்பூரத்தின் வாசனையோடு, அந்தப் பட்டு சில்லென்று குளிர்ச்சியாய், பாப்பாவின் கன்னம்போல மிருதுவாய் இருக்கும். அதைத் தடவித் தடவிச் சந்தோஷம் கொள்வேன், என்பதிலிருந்து தந்தை மீது கொண்ட மகனின் பாச உணர்வை விளங்கிக் கொள்ள முடிகிறது.

**அப்பாவின் வேஷ்டியின் அழகு**

குழந்தைகளாகிய எங்களுக்கு அவருடைய சிவப்புப் பட்டு வேஷ்டியே அற்புதமானதாகத் தோன்றியது.சிவப்பென்றால் சுத்தச் சிவப்பும் இல்லை. குங்கும வண்ணமும் இல்லை. செப்புப் பாத்திரத்தைப் புளிபோட்டு விளக்கிப் படிக் கல்லில் வைத்து விட்டுக் குளிப்பார்களே. அப்போது பார்த்திருக்கிறீர்களா? நீங்கள்! உதயகாலத்துச் சூரிய ரேகைகள் பட்டுத் தகதகக்குமே, அந்தச் செப்புப் பாத்திரம் - அது மாதிரியான வேஷ்டி அது.முழுதும் செப்புக் கலரும் இல்லை. கரை பச்சை நிறம். நாலுவிரல் அகலம். கரையில் சரிகை வேலைப்பாடுகள். சரிகை வேலைப்பாடு என்ன என்கிறீர்கள்? வாத்துகள் ஒன்றன்பின் ஒன்றாய் அணிவகுத்துச் செல்கிற சித்திரம். அவை வாத்துகள் அல்ல; அன்னப்பறவைகள் என்றாள், அம்மா. நாங்கள் அன்னப்பறவைகளை

நிறத்தில் பார்த்ததில்லை. அந்த வேஷ்டியின் கரையில்தான் பார்த்திருக்கிறோம். எதுவானால்தான் என்ன? உயிருள்ள ஜீவராசிகள்.

**அப்பா வேஷ்டியை பராமரிக்கும் விதம்**

அந்த வேஷ்டியை அப்பா துவைத்து நான் இரண்டு முறை பார்த்திருக்கிறேன். குழந்தைப் பாப்பாவைக் குளிப்பாட்டுவது மாதிரி இருக்குமே! அதற்குச் சுடு தண்ணீர் ஆகாது. பச்சைத் தண்ணீரில் தான் அதைக் குளிப்பாட்டுவார். சவுக்காரம் அதற்கு ஆகாதாம். ஆகவே சந்தன சோப்பைத்தான் அப்பா உபயோகிப்பார். அப்பா குளித்தது மைசூர் சந்தன சோப்பில். அதற்கும் முந்தி கதம்ப சோப்பில். பிரான்சில் இருந்து வந்த கதம் சோப். நாங்கள் கதம்ப சோப் என்போம். இறக்குமதி நின்று போனவுடன் மைசூர்ச் சந்தன சோப். அதைத்தான் இதற்கும் போடுவார். சோப் போடுவது தடவிக் கொடுப்பது மாதிரி இருக்கும். அம்மா எங்களுக்கு எண்ணெய் தேய்த்து விடுகிற முரட்டுத் தனம் இருக்காது. அவ்வளவு மெது. கசக்கிப் பிழிய மாட்டார். மெதுவாக நீரில், அகலவாக்கில் வேஷ்டியின் முனைகளைப் பிடித்துக்கொண்டு அலசுவார். பிறகு, தண்ணீர்த் துளி எங்கள் மேல் தெறிக்க, உதறுவார். ரொம்பவும் உதறக்கூடாது. நாள்பட்ட துணி, கிழித்துவிடக் கூடும். உதறும்போது. மழைச் சாரலில் நிற்பதுபோல் இருக்கும், எங்களுக்கு. அப்புறம் நிழலில் காயப்போடுவார். வெயில் பட்டால் நிறம் வெளுக்கக்கூடும். காய்ந்ததும் அப்பாவுக்குச் சொல்ல வேண்டியது எங்கள் பொறுப்பு. நாங்கள் மாற்றி மாற்றி அஞ்சு நிமிஷத்துக்கு ஒரு முறை துணியைத் தொட்டுப் பார்த்துக் கொண்டே இருப்போம். காய்ந்து விட்டதா என்று பார்ப்பதற்காகத்தான். எங்களுக்கு இது ஒரு சாக்கு. அந்தச் சாக்கில் வேஷ்டியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டே இருக்கலாமே! சாயங்காலம் வாக்கில் வேஷ்டி காய்ந்து விட்டிருக்கும். அப்பாவிடம் சொல்ல ஓடுவோம். அப்பாவே வந்து, நிதானமாக அதைக் கொடியில் இருந்து எடுத்து, மூலை பிசிறில்லாமல் இழுத்து மடித்து, மீண்டும் அந்தப் பெட்டிக்குள் வைத்துவிடுவார். இனி அதன் உபயோகம் அடுத்த நல்ல நாளில்தான்.

**அப்பாவின் வேஷ்டி சிறுகதையின் மையப் பொருள்**

அப்பாவின் கரைவைத்த சரிகை வேலைப்பாடுகள் அமைந்த வேஷ்டியே இக்கதையின் மையப்பொருளாகும். அப்பாவின் வேஷ்டியை கட்டிப்பார்க்கத் துடிக்கும்

மகனின் ஆர்வமும் ஏக்கமும் இக்கதையில் வெளிப்படுகின்றது. மகனின் மன உணர்வுகளை கீழ் கண்ட வரிகள் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

இதைச் சொல்ல வெட்கம் என்ன? எனக்குப் பெரியவன் ஆனதும் அப்பாவின் வேஷ்டியைக் கட்டிக் கொள்ளவேண்டும்! இதுவே என் லட்சியமாக இருந்தது. நான் பெரியவன் ஆக ஆசைப்பட்டது இதற்காகத்தான். பெரியவன் ஆனால் அப்பாவைப் போல மீசை முளைக்குமே! மார்பில் சுருள் சுருளாக முடி முளைக்குமே.. முக்கியமான விசேஷ நாட்களில், அந்தச் சிவப்புப் பட்டு வேஷ்டியைக் கட்டிக்கொண்டு நான் சாமி கும்பிடுவேனே... நான் பெரியவன் ஆக வேண்டுமே!மடித்தே வைக்கப்பட்டுக் கிடந்ததால், அந்த வேஷ்டி எப்போதும் மடிப்புக் குலையாமல் இருக்கும். மடிப்புகள் பிரிக்க முடியாதனவாக இருக்கும். கடைசி வரை அன்னங்கள் முழுமையாகவே இருந்தன. சரிகைக்கரை இற்று விழவில்லை. நெசவு நேர்த்தி அப்படி. அது அந்தக் காலத்துக் கை வேலைத் திறன். அவசர வாகன யுகம் தோன்று முன்பே தோன்றிய ஒரு நெசவுக் கலைஞனின் கை நேர்த்தி அப்படி உருவாகி இருந்தது. 'இதை எங்கு வாங்கியது?' என்று அப்பாவிடம் கேட்டு வைத்துக் கொள்ளவில்லை நான். காவிரிக்கரையில், சோற்றுக்குப் பஞ்சம் இல்லாத, வெற்றிலை பாக்குப் போட்டு சிவந்த வாயுடன், உடம்பில் இளஞ்சூடு பரவிய திருப்தியில் ஒரு மனிதன் தன் மனைவியோடு சேர்ந்து நெய்த வேஷ்டியாக இது இருக்க வேண்டும். மாயவரம், கூரைநாடு, திருபுவனம் என்று ஏதாவது ஒன்றாய் இருக்கக் கூடும். பிறப்பிடம், மூலம் எதானால் என்ன? பிறந்த பயனை? கர்மாவைக் குறைவற, பரிபூரணமாகச் செய்தது அது என்பது சத்தியம் என்று கூறும் மகனின் எண்ண உணர்வுகளை மிக எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்.

## 5. இருவர் கண்ட ஒரே கனவு

**முன்னுரை**

கு.அழகிரிசாமியின் செம்மையான பல படைப்புக்களுள் இதுவும் ஒன்று எனக் கூறலாம். '*இருவர் கண்ட ஒரே கனவு*' எளிமையையே அழகாகக் கொண்ட கதை.

உணர்ச்சிகரமான ஒரு தருணம் மட்டும்தான் அதில் உள்ளது. பெண்களின் அவல வாழ்வை பேசும் புனைகதைகளுள் இக்கதை நம் ஆழ்மனஓட்டங்களைத் தொடும் அற்புதப் படைப்பாகும். ஆதரவற்ற விதவை தன் இரு குழந்தைகளுக்காக படும் துயரத்தை அவல வாழ்வை, ஏழ்மை நிலையை இக்கதை அழகாகவும் யதார்த்த தன்மையிலும் சித்தரித்துக் காட்டுகிறது.

**வருமைநிலை**

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்வாதாரத் தேவையாக இருப்பது உணவு, உடை, உறையுள். இவற்றை முழுமையாக அடைவதே நம் வாழ்நாள் போராட்டமாக உள்ளது. இவை சரிவர கிடைக்கப் பெறாத மனித வாழ்வென்பது பரிதாபத்திற்பகுரியதாகும். கு.அழகிரிசாமியின் இக்கதையில் கணவனை இழந்து விதவையாக வாழும் வெள்ளையம்மாள் உடுத்த உடையில்லாமலும், தங்குவதற்கு வீடில்லாமலும் தனக்கும் தன் இரு பிள்ளைகளுக்கும் பசிக்கு உணவில்லாமலும் வாழும் வறுமையின் அவலத்தையும் ஏழ்மையின் பரிதாபத்தையும் மிக நேர்த்தியாகச் சித்தரித்துக் காட்டுவதாக உள்ளது.

**வெள்ளையம்மாளின் அவலம் நிறைந்த வாழ்வு**

கணவனை இழந்த பெண் ஆதரவற்று தவிக்கும் அவலத்தை இக்கதை மையமாகக் கொண்டிருக்கின்றது.

"சிற்சில வருஷங்களில், வேலை கிடைக்கும் காலத்தில் கிராமத்துக்கு நாலைந்து விதவைகள் இதேபோல் துணியில்லாமல் வீட்டை அடைத்துக் கொண்டு அரைப்பட்டினியோ, முழுப் பட்டினியோகிடப்பது சகஜம் என்பது வெள்ளையம்மாளுக்கும் தெரியும்" என்ற வரிகள் விதவைப் பெண்களின் நிலையை சித்தரித்துக் காட்டுவதாய் உள்ளது.

இந்நிலையில் வெள்ளையம்மாள் தினமும் உழைத்தால் தான் தானும் தன் பிள்ளளைகளும் அரைவயிற்றுக் கஞ்சியாவது குடிக்கமுடியும் என்ற நிலையில் இருக்கிறாள்.

**வறுமையும் வைராக்கியமும்**

வறுமைக்கும் வைராக்கியத்திற்கும் இடையிலான போராட்டம் ஏழைகளின் வாழ்வில் தவிர்க்கமுடியாததாகும். ஏழ்மை நிலையிலும் வெள்ளையம்மாளின் வைராக்கியம் அவளுடைய பிள்ளைகளின் மூலம் வெளிப்படுவதை இக்கதையில் காணமுடிகின்றது.

சிறுவர்கள் தொழுவுக்கு நடந்து வரும்போதே, “சீ! ஊரார் வீட்டிலே கஞ்சி வாங்கிக் கிட்டு வாறே! கேவலம்! இரு, அம்மாகிட்டச் சொல்றேன்” என்றான் மூத்தவன்.
பசி என்பதற்காக அடுத்த வீட்டில் கஞ்சி வாங்கிக் குடிப்பது கேவலம் என்று அவர்களுக்கு அம்மா சொல்லி வந்திருக்கிறாள். அந்த நிலையில் இப்போது கஞ்சிச் சட்டியோடு போனால் அம்மா அடிப்பாள் என்று சின்னவனுக்கும் தெரியும். இருந்தாலும், இரண்டு நாளையப் பசி அவனுக்குப் பதிலாக அவனுடைய ஸ்தானத்தில் நின்று அண்ணனையும் அம்மாவின் உபதேசத்தையும் எதிர்த்து முழுப் பலத்தோடு போராடியது.

. என்ற வரிகள் வறுமையின் பிடியிலும் பசிக் கொடுமையிலும் வைராக்கியத்தை இழக்கத் துணியாத ஏழைகளின் வாழ்வை பார்க்க முடிகிறது.யீடுகளாக வெளியிடப்பட்டன.

## UNIT - 4

### பகுதி: அ

**சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. 'பிரபஞ்சன்' எழுதிய சிறுகதையின் பெயர் என்ன?

(அ). மகாமசானம் (ஆ) அப்பாவின் வேஷ்டி (இ). அந்நியர்கள் (ஈ). இந்நாட்டு மன்னர்

2. உளவியல் எழுத்தாளர் என்று புகழப்பட்டவர் யார்?

(அ). அழகிரிசாமி (ஆ) பாரதிதாசன் (இ). கவிமணி (ஈ). சூடாமணி

3. நாஞ்சில் நாடனின் இயற்பெயர் என்ன?

(அ). புதுமைப்பித்தன் (ஆ) பிரபஞ்சன் (இ). சூடாமணி (ஈ). சுப்பிரமணியம்

4. எழுத்தாளர் கு. அழகிரிசாமி அவர்கள், சாகித்திய அகாடமி விருது பெற்ற ஆண்டு எது?

(அ). 1960 (ஆ). 1970 (இ). 1975 (ஈ). 1980

5. 'அன்பளிப்பு ' எனும் சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர்________.

அ) புதுமைப்பித்தன் ஆ) நாஞ்சில்நாடன் இ) கு.அழகிரிசாமி ஈ) பிரபஞ்சன்

6. 'குலாப்ஜான் காதல்' - சிறுகதை வெளியான ஆண்டு _______.

அ) 1934 ஆ) 1943 இ) 1933 ஈ) 1983

7. 'மகாமசானம்' என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?

(அ). கி.ஆ.பெ விசுவநாதம் (ஆ). புதுமைப்பித்தன் (இ). நாஞ்சில் நாடன் (ஈ). பிரபஞ்சன்

8. 'முட்டை' என்ற படைப்பின் ஆசிரியர் யார்?

(அ). கி.ஆ.பெ விசுவநாதம் (ஆ). புதுமைப்பித்தன் (இ). நாஞ்சில் நாடன் (ஈ). பிரபஞ்சன்

9. ஸவிதா என்ற கதாபத்திரம் இடம்பெற்றுள்ள சிறுகதை எது?

(அ). அந்நியர்கள் (ஆ). மகாமசானம் (இ). இந்நாட்டு மன்னர் (ஈ). அப்பாவின் வேஷ்டி

10. சூடிய பூ சூடற்க என்ற சிறுகதைத் தொகுப்பிற்கு, சாகித்ய அகாதமியின் பரிசுபெற்றவர் யார்?

(அ). கி.ஆ.பெ விசுவநாதம் (ஆ). புதுமைப்பித்தன் (இ). நாஞ்சில் நாடன் (ஈ). பிரபஞ்சன்

11. வெள்ளையம்மாள் என்ற கதாபத்திரம் இடம்பெற்றுள்ள சிறுகதை எது?

(அ). அந்நியர்கள் (ஆ). மகாமசானம் (இ). இந்நாட்டு மன்னர் (ஈ). இருவர் கண்ட ஒரே கனவு

12. புதுமைப்பித்தனின் முதல் படைப்பு எது?

அ) மகாமசானம் ஆ) பொன்னகரம் இ) காஞ்சனை ஈ) குலாப்ஜான் காதல்

13. பிரபஞ்சன் என்னும் சிறுகதையாசிரியரின் இயற்பெயர் என்ன?

அ) விருத்தாசலம் ஆ) செல்லையா இ) வைத்தியலிங்கம் ஈ) சுப்பிரமணியம்

14. ஸவிதா என்னும் கதாபாத்திரம் இடம்பெற்றுள்ள சிறுகதை எது?

அ) அப்பாவின் வேஷ்டி ஆ) அந்நியர்கள் இ) அந்நாட்டு மன்னர் ஈ)மகாமசானம்

15. சாகித்திய அகாதமி விருது பெற்ற நாஞ்சில் நாடனின் சிறுகதைத்தொகுப்பு எது?

அ) அன்பளிப்பு ஆ) சூடிய பூ சூடற்க இ) ஒரு கிராமத்து நதி ஈ) வானம் வசப்படும்

16. இன்றைய சிறுகதை எழுத்தாளர்களுக்கு முன்னோடியாகத் திகழ்பவர் யார்?

அ) பிரபஞ்சன் ஆ) ஆர்.சூடாமணி இ) கு.அழகிரிசாமி ஈ) நாஞ்சில் நாடன்

17. தமிழின் முதல் நாவல் ________.

(அ). கமலாம்பாள் சரித்திரம் (ஆ). பிரதாபமுதலியார் சரித்திரம் (இ). குலாப்ஜான் காதல் (ஈ). குளத்தங்கரை அரசமரம்

18. கடவுளும் கந்தசாமி பிள்ளையும் என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?

(அ). கி.ஆ.பெ விசுவநாதம் (ஆ). புதுமைப்பித்தன் (இ). நாஞ்சில் நாடன் (ஈ). பிரபஞ்சன்

19. ‘ஸவிதா’ என்ற கதாபத்திரம் இடம்பெற்றுள்ள சிறுகதை ________.

(அ). அந்நியர்கள் (ஆ). மகாமசானம் (இ). இந்நாட்டு மன்னர் (ஈ). அப்பாவின் வேஷ்டி

20. பிரபஞ்சனின் இயற்பெயர் என்ன?

(அ). விசுவநாதம் (ஆ). புதுமைப்பித்தன் (இ). நாஞ்சில் நாடன் (ஈ). வைத்தியலிங்கம்

21. ‘மனதுக்கு இனியவள்’ என்ற புதினத்தின் ஆசிரியர் ________.

(அ). கி.ஆ.பெ விசுவநாதம் (ஆ). புதுமைப்பித்தன் (இ). நாஞ்சில் நாடன் (ஈ). சூடாமணி

## *பகுதி – ஆ*

***அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளி:***

1. புதுமைப்பித்தன் இயற்றிய நூல்களைப் பட்டியலிடுக.
2. புதுமைப்பித்தன் சிறுகுறிப்பு வரைக.
3. அப்பாவின் வேஷ்டி’ - சிறுகதையில் வேஷ்டி பற்றிய வர்ணனைகளை எழுதுக.
4. நாஞ்சில் நாடன் குறிப்பு வரைக.
5. இருவர் கண்ட ஒரே கனவு’ சிறுகதையில் வெள்ளையம்மாள் பாத்திரப்படைப்பு குறித்து எழுதுக.
6. ஆர்.சூடாமணி – குறித்து எழுதுக.

## *பகுதி – இ*

***பெருவினாக்கள்: அனைத்து வினாக்களுக்கும் விடையளி:***

1. ‘மகாமசானம்’ சிறுகதையின் மையக்கருத்தை விவரி.
2. நாஞ்சில்நாடனின், ‘இந்நாட்டு மன்னர்’ என்ற சிறுகதையைத் திறனாய்வு செய்க.
3. அந்நியர்கள் என்ற சிறுகதையின் கதைக்கருவை சுருக்கி எழுதுக.
4. ‘அப்பாவின் வேஷ்டி’ - சிறுகதையைத் திறனாய்வு செய்க.
5. இந்நாட்டு மன்னர் சிறுகதையில் வைத்தியன் கதாப்பாத்திரத்தின் தன்மையை விவரி.
6. ‘இந்நாட்டு மன்னர்’ சிறுகதையைத் திறனாய்வு செய்க.
7. ‘அப்பாவின் வேஷ்டி’ - சிறுகதை சித்தரிக்கும், தந்தை மகன் அன்பை எடுத்துரைக்க.
8. இந்நாட்டு மன்னர் என்ற சிறுகதையின் மையத்தைச் சுருக்கி எழுதுக.
9. அப்பாவின் வேஷ்டி என்ற சிறுகதையின் மையப்பொருளை எழுதுக.
10. ‘இந்நாட்டு மன்னர்’ சிறுகதை சுட்டுகின்ற, இன்றைய தேர்தல் அவலத்தை விவரி.
11. நலிந்தோர் வாழ்க்கையை, ‘இருவர் கண்ட ஒரே கனவு’ சிறுகதை வழி விவரி.
12. நகரச் சூழலை மகாமசானம் சிறுகதை விரித்துரைக்கும் பாங்கினை எழுதுக.

**UNIT-V**

**SYLLABUS**

| மொழிப்பயிற்சி – மொழிப்பயிற்சி |
|---|

## மொழிப்பயிற்சி

1. பொருத்தமான தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதல்
2. செய்யுள் பொருளுணர் திறன்
3. மொழிபெயர்ப்புப் பயிற்சிகள்
4. கடிதங்கள் மற்றும் விண்ணப்பங்கள் எழுதுதல்

KAHE

## மொழிப்பயிற்சி - கடிதப் பயிற்சி

### 1. பாரதி விழா செய்தியினை வெளியிட பதிப்பாசிரியருக்கு விண்ணப்பம்

29-08-2019,

கோயம்புத்தூர்.

அனுப்புநர்,

அ. அறிவழகன்
செயலாளர், தமிழ்மன்றம்,
கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்
ஈச்சனாரிஅஞ்சல், கோயம்புத்தூர் – 21.

பெறுநர்,

பதிப்பாசிரியர்
தினமணிநாளிதழ்
கோயம்புத்தூர் – 21.

ஐயா,

பொருள் :மகாகவிபாரதியார்நினைநாள்செய்தியினைவெளியிடவேண்டிவிண்ணப்பம்.

வணக்கம்.

கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகத் தமிழ் மன்றமும், கோயம்புத்தூர் தமிழ்ச் சங்கமும் இணைந்து, மகாகவி பாரதியாரின் நினைவு நாளை, வருகின்ற 5-09-2019, 6-09-2019, வியாழன், வெள்ளி ஆகிய இரண்டு நாள் பெருவிழாவாக, கோயம்புத்தூர் கொடிசியா வளாகத்தில் சிறப்புற நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம். விழாவின் முக்கிய நிகழ்வாகத் தமிழகத்தின் அனைத்துப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுக்கிடையேயான, மாநில அளவிலான, பேச்சு, கவிதை மற்றும் கட்டுரைப் போட்டிகள் சிறப்புற நடைபெற உள்ளன. அப்போட்டிகளுக்கான பரிசளிப்பு விழாவில், நல்லாசிரியர், தமிழ்ச்சான்றோர் விருதாளர், திரு செந்தலை ந.கௌதமன் அவர்கள் கலந்து கொண்டு, பாரதி காணவிரும்பிய இளைஞர் சமுதாயம்" என்னும் தலைப்பில் சிறப்புரை ஆற்ற உள்ளார். மேலும், இருநாட்களிலும், மகாகவியின் சிந்தனைகளை ஒட்டி, கற்பகம் உயர்கல்விக் கலைக் கழக மாணவர்களின் இசை மற்றும் நாடக நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறவுள்ளன. விழாவில், தாங்களும் கலந்துகொண்டுச் சிறப்பிக்க, அன்புடன் வேண்டுகிறோம். அத்துடன், இவ்விழாவினைக் குறித்த செய்தியினைத் தங்கள் நாளிதழில் வெளியிட்டு உதவுமாறும் வேண்டுகிறோம்.

நன்றி.

இப்படிக்கு,
அ. அறிவழகன்,
தமிழ்மன்றச்செயலாளர்
கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்

## 2. நண்பனுக்கு வாழ்த்துத் தெரிவித்து, பாராட்டுக் கடிதம்.

**நண்பனுக்குப்பாராட்டுக்கடிதம்**

07-09-2019,
கோயம்புத்தூர்.

அன்பிற்கினியநண்பனுக்கு,

நலம். நலமறியஆவல். உனக்கும் உனது குடும்பத்தாருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள். நான் உனக்குக் கடந்தமுறை எழுதிய கடிதமும் வாழ்த்துக் கடிதமாக இருந்தது. இந்தக்கடிதமும் வாழ்த்துக் கடிதமாகவே அமைந்து விட்டமையால், எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.சென்றவாரம், புதுதில்லியில் குடியரசுத்தலைவர் திரு.பிரணாப்முகர்ஜியைச் சந்தித்து, ‘சிறந்தஇளம்சமூகத்தொண்டர்’ என்ற விருதினைப் பெற்றுவந்த அனுபவம் குறித்து எழுதியிருந்தாய். அத்துடன், நீவிருது பெற்றதைப் பாராட்டி, கற்பகம் உயர்கல்விக் கலைக் கழகத்தில் சிறந்ததொரு பாராட்டுவிழாவும் நடைபெற்றதையும் குறிப்பிட்டு, நீஅனுப்பியிருந்த கடிதமும் கிடைத்தது. நாட்டுக்கு உழைக்கின்ற நல்லகுடிமகனாக உன்னைப்பெற்றெடுத்த உனதுபெற்றோரின் திருவடிதொட்டு வணங்கி மகிழ்கின்றேன். உனது சாதனைக்காக அவர்கள், மகிழ்கின்ற வேளையில், எனது முதுநிலைப்பட்ட(PG:MBA) வாய்ப்புக்காக, இன்னும் இரண்டு மாதங்களில் ஃப்ளோரிடா செல்ல இருப்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்து. அவர்களது ஆசிகளும், ஊக்குவிப்புமே இத்தகைய அரியவாய்ப்பைப் பெற்றுத்தந்தது என்பது உண்மை. அவர்களுக்கு எனது வணக்கம். தாய்நாட்டிலேயே பயின்று, உலகச்சாதனைபுரிந்து, தாய்நாட்டுக்கே தொண்டுபுரிய வேண்டும் என்ற உனது கனவு வெகுவிரைவில் நிறைவேறவாழ்த்துக்கள். அதற்காகவே, இந்திய மேலாண்மையியல் கல்வி நிறுவனத்தில்(IIM) முதுநிலைப்பட்டம் மேற்கொள்வதற்கான பொதுநுழைவுத் தேர்வைஎழுதி, தேசியஅளவில் முதலிடமும் பெற்றுவிட்டாய். இவ்வெற்றிக்கான கடினஉழைப்புடன், பல்கலைக் கழகத்தேர்வையும் எழுதி, சிறப்புப்புள்ளிகளுடன் வெற்றி பெற்றுள்ளாய். பல்கலைக்கழகத் தேர்வில் இதுவரையிலும் இல்லாதசாதனையையும் புரிந்துள்ளாய். இதுஉனது பேராசிரியர்களுக்கும், பல்கலைக்கழகத்துக்கும், நமது நண்பர்களுக்கும் பெருமை சேர்க்கக்கூடிய தாகும். இதுகுறித்த செய்தியினைத் தினமணிநாளிதழில் கண்டுமகிழ்ந்தேன். உனது உடன்பயில்கின்ற மாற்றுத்திறனாளி நண்பரையும் ஊக்குவித்து, அவரையும் தேர்வில்முதலிடம் பெறச்செய்த, உனது தன்னலமில்லாத தொண்டினைத்தலை தாழ்த்தி வணங்கி, வாழ்த்தி

மகிழ்கின்றேன். நமது வெற்றிப்பயணம் மேலும் தொடரும்.நல்ல பண்புகளால் செழித்துள்ள நமதுநட்பால் நாட்டுக்குப் பெருமைசேர்ப்போம்.

நன்றி.

இப்படிக்கு,
இனியநண்பன்,
அறிவழகன்.
கையொப்பம் (தமிழில்).

உறைமேல்முகவரி,

திருஅன்பு.அறிவொளிஅவர்கள்,
எண் : 20, விவேகானந்தர்நற்பணிமன்றம்,
தொல்காப்பியர்நகர், தஞ்சாவூர்-12.

**3.கருத்தரங்கப் பங்கேற்பிற்கு அனுமதி வேண்டி விண்ணப்பம்**

இடம் : ஈச்சனாரி
நாள் : 8.9.2019

அனுப்புநர்

அ. அறிவழகன்
வணிகவியல் முதலாம் ஆண்டு,
கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்,
ஈச்சநாரி.

பெறுநர்

துறைத்தலைவர் அவர்கள்,
வணிகவியல் துறை
கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகம்,
ஈச்சநாரி.

மதிப்பிற்குரியீர்,

**பொருள்: கருத்தரங்கப் பங்கேற்ப்பிற்கு அனுமதி வேண்டுதல் தொடர்பாக.**

வணக்கம். நான் கற்பகம் உயர்கல்விக் கலைக்கழகத்தில் இளங்கலை வணிகவியல் முதலாம் ஆண்டு படித்து வருகிறேன்.வருகின்ற 8.9.2019 அன்று இரத்தினம் கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற உள்ள பன்னாட்டுக் கருத்தரங்கிரல் பங்குபெற அனுமதி அளிக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இக்கடிதத்துடன் கருத்தரங்க அழைப்பு அறிக்கையும் இணைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

நன்றி!

இப்படிக்குத்
தங்கள் உண்மையுள்ள

(…………………..)

**கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம் 19LSU101**

**கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம் (For Science Students)**

**தமிழ்த்துறை**

**முதலாம் பருவம் : முதல் இடைத்தேர்வு நாள் :**

**நேரம்: 2 மணி மொத்த மதிப்பெண்கள்: 50**

**பகுதி : அ : சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக: (20X1=20)**

1. ஆத்திச் சூடி யிளம்பிறையணிந்து மோனத் திருக்கு முழுவெண் மேனியன் யார்?

அ). திருமால் ஆ)பலராமன் இ).பிரம்மன், **ஈ). சிவபெருமான்**

2. கருநிறங்கொண்டு பாற்கடல்மிசைக் கிடப்போன் யார்?

அ).ஆதிசேடன் **ஆ).திருமால்** இ).மந்தரமலை ஈ).சனீஸ்வரன்

3. மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன் யார்?

**அ).அல்லாஹ்** ஆ).கேப்ரியல் இ).அப்துல்லா ஈ).மதகுரு

4. அதனருள் வாழ்த்தி என்ன வாழ்வு எய்துவோம் என்கிறார் பாரதியார்?

அ). மறுவாழ்வு ஆ).இன்பவாழ்வு **இ).அமரவாழ்வு** ஈ).சமரவாழ்வு

5. இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடமையாக்கப்பட்ட இலக்கியம் யாருடையது? எந்த வருடம்?

**அ).பாரதியார்1949** ஆ).கவிமணி1950 இ).பாரதிதாசன்1963 ஈ).கல்யாணசுந்தரனார்1972

6. குயில் என்னும் திங்கள் இதழை நடத்திவந்தவர் யார்?

அ).பாரதியார் ஆ).கவிமணி **இ).பாரதிதாசன்** ஈ).கல்யாணசுந்தரனார்

7. ‘கழை’ என்பதன் பொருள் என்ன?

அ). பலாப்பழம் ஆ). மாம்பழம் **இ). கரும்பு** ஈ). வாழைப்பழம்

8. இனியன என்பேன் எனினும் - தமிழை-------என்பேன் கண்டீர்என்கிறார் பாரதிதாசன்?

அ). இன்னுயிர் ஆ) மன்னுயிர் இ). உன்னுயிர் **ஈ). என்னுயிர்**

9. ‘புரட்சிக்கவி’என்ற பட்டத்தை பாரதிதாசனுக்கு வழங்கிச் சிறப்பித்தவர் யார்?

அ).பாரதியார் ஆ).கவிமணி **இ). அறிஞர் அண்ணா** ஈ).கல்யாணசுந்தரனார்

10. உயிரையும் உணர்வையும் வளர்ப்பது எதுவெனக் குறிப்பிடுகிறார் பாரதிதாசன்?

அ). உணவே ஆ).தன்னலமே **இ).தமிழே** ஈ). இலஞ்சமே

11.‘ஏவா மக்கள்’ எனப்பெறுவோர் யார்?.

அ).அறிவில் சிறந்தோர் ஆ).செல்வந்தர்இ). வீரர் **ஈ). பெற்றோரின் குறிப்பறிந்து நடப்போர்**

12. அசதிக்கோவை நூலை இயற்றியவர் யார்?

அ).பாரதியார் ஆ).கவிமணி இ). அறிஞர் அண்ணா **ஈ).ஔவையார்**

13. நீதி நூல்களுள் காலத்தால் முற்பட்டது எது?

அ) பழமொழிநானூறு ஆ) நாலடியார் இ) கொன்றை வேந்தன் **ஈ) திருக்குறள்**

14. உலகம் நிலைத்திருப்பது யாரால்?.

**அ).பண்புடையவர்களால்** ஆ). செல்வந்தர்களால் இ). வீரர்களால் ஈ). நண்பர்களால்

15. அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் …..இல்லாதவர்?.

அ). ஒழுக்கம் ஆ). ஈகைப்பண்பு இ). அறிவு **ஈ). மக்கட்பண்பு**

16. முக்கூடல் பள்ளு இலக்கியத்தின் ஆசிரியர் யார்?

அ).ஔவையார் ஆ).திருவள்ளுவர் இ).முன்றுறைஅரையனார் **ஈ).என்னாயினாப்புலவர்**

17.தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் நகரம் எது?

அ). மதுரை ஆ).சென்னை **இ).முக்கூடல்** ஈ). மாமல்லபுரம்

18. நவீனத் தமிழ் இலக்கியத்தின் முன்னோடி யார்?

அ). அப்துல் ரகுமான் **ஆ). புதுமைப்பித்தன்** இ). பாரதியார் ஈ). பாரதிதாசன்

19. புதுமைப்பித்தனின் இயற்பெயர் என்ன?

அ). வெங்கிடாசலம் **ஆ). விருத்தாசலம்** இ). மருதாசலம் ஈ). அருணாசலம்

20.மகாமசானம் என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?

அ). பிரபஞ்சன் **ஆ). புதுமைப்பித்தன்** ,இ). அழகிரிசாமி ஈ). நாஞ்சில்நாடன்

**பகுதி – ஆ: இருமதிப்பெண் வினாக்கள் (3X2=6)**

**அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளி:**

**21. “பாரதியார்” - சிறுகுறிப்பு வரைக?.**

பாட்டுப்புலவன் பாரதி தன்னுடைய கவித்திறத்தால் இவ்வையத்தை பாலித்திட நினைத்தவர். தன்னுடைய கவிதைகளின் மையமாக மக்களையும், நாட்டையும் மட்டுமே கொண்டிருந்வர். யோகசித்தி என்ற அவரது பாடப்பகுதி கவிதயில் எதிர் காலத்தில் நாடு பெறவேண்டிய நலன்களையும், சிறப்புக்களையும் அருளச் சொல்லி தேவியை வேண்டி நிற்பதோடு அவ்வளம் மிகுந்து நாட்டிற்குத் தாம் தலைவனாக இருக்கவேண்டும் என்ற தன்னுடைய விருப்பத்தையும் பதிவு செய்கிறாா் எனலாம்.

**22. ஔவையார் எழுதிய நூல்களைப் பட்டியலிடுக?**

நல்வழி, ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், பந்தனந்தாதி, மூதுரை, ஞானக்குறள், அசதிக்கோவை போன்றவை.

**23.”பண்புடையார் பட்டுண்டு உலகம்” என்ற குறளின் பொருள் விளக்கம் தருக?**

எல்லோரிடத்தும் எளிமையான தன்மையுடையவராதலின் பண்புடைமை என்னும் நன்னெறியை அடைவது எளிது என்று சொல்லுவர் அறநூலோர். குணங்களால் நிறைந்த தன்மை உடையதாலும், உலகத்தைத் தன்பால் வசீகரிப்பதாலும், தொல்லோர் சென்ற நன்னெறி என்பதாலும் பண்புடைமையை அனைவரும் எளிதில் பின்பற்றி ஒழுகுதல் வேண்டும் என்பதற்காக நூலோர் இங்ஙனம் கூறுகின்றனர்.

பண்புடையாரைச் சார்ந்து அமைந்திருப்பதால் உலகம் இடையறாது இயங்கி வருகிறது. அவ்வாறு சார்ந்து இல்லையாயின் உலகமானது மண்ணுள் புகுந்து மறைந்து போகும். எனவே

உலகியல் நிலைத்து இயங்குவதற்கு அனைவரும் பண்புடைமையைச் சார்ந்து ஒழுகுதல் வேண்டும்.

## பகுதி - இ

**அனைத்து வினாக்களுக்கும் தவறாமல் கட்டுரை வடிவில் விடையளி - (4x6=24)**

### 24. தமிழின் இனிமை குறித்து பாரதிதாசன் கூறும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க .

**பலாவும் கரும்பும்** : கனி என்பதே சுவயுடையது. அதிலும் அந்தக் கனியில் சுளைகளாக இனிமை ஏறி நிற்கும் போது அதுவும் மேலும் சுவை நிரம்பியதாகிறது. கரும்பே இனிமை அதிலும் முற்றிய கரும்பின் சாறு ஏறி நிற்கும் போது மேலும் இனிமையாகிறது.

**மலரும் பாகும்** : குளிர்ந்த மலரைப் பார்ப்பதே அழகு. அந்த அழகின்மேல் நிரம்பி நிற்கும் தேன் இன்னும் சுவையை மிகுவிக்கிறது. பாகினைக் காய்ச்சும்போது இன்னும் இனிமைச் சுவை ஏறி நிற்கிறது.

**பாலும் நீரும்** : சிறந்த பசு பொழிகின்ற பால் இனியது. தென்னை மரம் நல்கும் குளிர்ந்த இள நீர் இனியது. என்னுயிர் இவையெல்லாம்.

**‘ இனியன என்பேன் எனினும் - தமிழை**

**என்னுயிர் என்பேன் கண்டீர்!**’ என்று இனிமைக்கெல்லாம் உயர்வான உயிர் என்று முடிக்கின்றார் கவிஞர்.

இங்கே கனி என்பதைப் பலாப்பழத்தையுத் கழை என்பது கரும்பையும் குறிக்கின்றன. இவற்றின் இன்பமெல்லாம் உடலுக்கு ஆனால் அந்த உடலில் உள்ள உயிரோ தமிழுக்கு என்று கணக்கு வாய்ப்பாடு தருகிறார் கவிஞர்.

**பொழிலும் புனலும்** : புனலும் பூம்பொழிலில் வண்டுகளின் ஒலியும் ஓடையில் செல்லுகின்ற நீரின் துள்ளல் ஓசையும் நான் விரும்புவன.

**குழலும் வீணையும்** : புல்லாங்குழலில் வெளிப்படும் இசையும் வீணை கொட்டுகின்ற அமுதம் போன்ற பண்ணும் நான் விரும்புவன.

**குழவிகளும் பெண்களும்** : குழந்தைகளின் மழலைப் பேச்சும் பெண்கள் கொஞ்சிடும் இதழ்களின் வாய்ப்பும் எனக்கு மிக விருப்பமானவை.

**உடலுயிர்** : இவற்றையெல்லாம் நான் விழைந்தாலும் ‘தமிழும் - நானும் மெய்யாய் உடலுயிர் கண்டீர் ! என்று தமிழின் இனிமையின் உயர்வை உறுதி செய்கிறார் பாரதிதாசன்.

**உடன்பிறப்பும் உறவும்** : உடன் பழகி வாழ்பவர்கள் அண்ணன் தம்பிமார்கள். அக்கம் பக்கத்தில் வாழ்கின்றவர்கள் உறவு முறைக்காரர்கள்.

**அன்னையும் தந்தையும்** : மிகுந்த கருணையுடையவள் அன்னையாவாள், என்னை எப்போதும் மறவாதவர் தந்தை.

**மனைவியும் பிள்ளையும்** : என்மனைவியோ குயில்போல பேசுபவள், நானும் அவளும் அன்பைக் கொட்டி வளர்த்துக் கொண்டிருக்கிற பிள்ளை ஆகியோர் எனக்கு உண்டு.

**அறிவில் உறைவு** : ஆனால் இவர்கள் எல்லாருமே எனக்கு அயலார்கள் என்று கருதும் வண்ணம் எனக்கு ஓர் உறவு உண்டு அப்படி என் அறிவினில் உறைந்திருக்கும் உறவு தமிழ் என்பதை நீங்கள் அறிவீர்களாக.

உற்றார் உறவினர்கள் எல்லாம் தன் உடலுக்கு வெளியேதான் உறைகிறார்கள் எனவும் தமிழ் மட்டுமே தன் உடலுக்குள்ளேயே அறிவில் உறைவதாகவும் அதனால் தமிழ்வேறு தான் வேறு அல்ல என்பதையும் கவிஞர் உணர்த்துகிறார்.

**வானும் ஒளியும்** : நீலச்சுடரின் தெளிவில் பளிச்சென்று இருக்கிறது வானம். அங்கே கடலின்மேல் பார்த்தால் எல்லாம் ஒளியாகக் காட்சியளிக்கிறது.

**மாலையும் மலையும்** : மாலையில் கதிரவனின் சுடரினில் மலைகள் மூழ்குகின்ற அந்தக் காட்சி நல்ல இன்பக்காட்சியாகும்.

**விந்தை :**இவற்றையெல்லாம் உயர்வானவை என்று கவிஞர்கள் எழுதுகிறார்கள். அப்படி எழுதுகின்ற கவிஞர்கள் தமிழின் விந்தையை விளக்கி எழுதும் தகுதியுடையவர்களாக இருக்க இயலுமோ? இயலாது.

இயற்கையழகெல்லாம் தம்மைப் பொன்ற கவிஞர்களால் எழுதமுடியும். ஆனால் தமிழின் விந்தையை யாராலும்எழுத முடியாது. இவ்வாறு செம்மொழியின் பெருமையைப் போற்றுகிறார் பாரதிதாசன்.

**சோறும் கறியும் :** செந்நெல்லை அரிசியாக்கி வேகவைத்துச் சுவையாக்கிய சோறும் பசுவின் நெய்யினால் சமைத்த காய்கறிகளின் வகையும்.

**முதழரையும் மிளகும்** : சுவையில் தனக்குத் தானே நிகர் என்று சொல்ல வல்ல முதிரைத் தானியமும் கட்டித்தயிரோடு மிளகின் சாறும்,

**கிழங்கும் அப்பமும் :** மிகவும் இனிய சுவை பயக்கும் கிழங்கும் கண்டாலே நாவில் இனித்திடுகின்னற அப்பமும்.

இவையெல்லாம் உடலை வளர்க்கும் உணவு வகைகள். ஆனால் உடலோடு தமிழன் என்ற உணர்வை வளர்ப்பதுதான் தமிழ் என்பதை,

**உணர்வு : 'உன்னை வளர்ப்பன தமிழா! – உயிரை**
**உணர்வை வளர்ப்பது தமிழே!'**

என்று வலியுறுத்துகிறார் பாரதிதாசன்.

## 25. ஔவையார் கூறும் நீதிக்கருத்துக்களை கொன்றை வேந்தன் வழிப் புலப்படுத்துக.

**1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்-**

தாய், தந்தையர் கண்கண்ட தெய்வம்

**2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று**

கோவிலுக்குச் சென்று இறைவனைத் தொழுவது மிகவும் நல்லது

**3. இல்லறமல்லது நல்லறமன்று**

இல்லறவாழ்வே மிகவும் நன்மை பயக்கக் கூடியது

**4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்**

பிறருக்கு உதவி செய்யாதோர் பொருளைத் தீயவர் பறித்துக் கொள்வர்

**5. உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு**

குறைத்து உண்ணுதல் பெண்களுக்கு அழகு தரும்

**6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்**

ஊராரோடு பகைத்துக் கொண்டால் குடும்பம் அழிந்து விடும்

**7. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்**

அறிவியலுக்கு ஆதாரமான எண்ணும், இலக்கிய அறிவுக்கு ஆதாரமான எழுத்தும் நமக்குக் கண் போன்றவை

**8. ஏவா மக்கள் மூவா மருந்து**

செய் என்று சொல்லும் முன்பே குறிப்பறிந்து செயலாற்றும் பிள்ளைகள் அம்ருதம் போன்றவர்கள்

**9. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு**

பொறாமைப் பேச்சு வளர்ச்சியை அழிக்கும்

**10. அஃகமும் காசும் சிக்கெனத் தேடு**

சிக்கனமாயிருந்து தான்யத்தையும், செல்வத்தையும் தேட வேண்டும்.

11. **கீழோராயினும் தாழ உரை**

உன்னை விடத் தாழ்ந்தோராயினும் நயமாகப் பேசு

12. **குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை**

பிறர் குற்றங்களையே ஆராய்ந்து கொண்டிருந்தால், சுற்றத்தார் என்று எவருமே இருக்க மாட்டார்கள்

13. **கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல்**

பலவானாக இருந்தாலும், கர்வப் பேச்சு பேசாதே

14. **கெடுவது செய்யின் விடுவது கருமம்**

நமக்கு ஒருவர் கெடுதல் செய்தால், அதை அப்படியே விட்டு விடுதலே உயர்ந்த செயல்

15. **கேட்டில் உறுதி கூட்டும் உடைமை**

தாழ்வு வந்த போதும் மனந்தளராது இருப்பதே மீண்டும் எல்லாவற்றையும் சேர்க்கும்

16. **கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி**

கையில் இருக்கும் பொருளை விட உண்மையான செல்வம் கல்வியே ஆகும்

17. **கொற்றவன் அறிதல் உற்றிடத்து உதவி**

தேவையிருக்கும் இடம் சென்று உதவி செய்தலே, ஆட்சி செய்வோர் அறிய வேண்டியது

18. **கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை**

எவரையும் பழித்துக் கொண்டே இருந்தால், அனைவருக்கும் அவன் பகையாளி ஆவான்

19. **சான்றோர் என்கை ஈன்றோட்கு அழகு**

பெற்றோருக்குப் பெருமை, அவர் பிள்ளைகள் சான்றோர் எனப் பாராட்டப்படுவதே

20. **சிவத்தைப் பேணில் தவத்திற்கு அழகு**

தவத்திற்கு அழகு இறை நினைவோடு இருப்பதே

21. **சீரைத்தேடின் ஏரைத் தேடு**

புகழோடு வாழ விரும்பினால், பயிர்த் தொழிலில் ஈடுபட வேண்டும்

22. **. சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்**

எந்த நிலையிலும் கூடி இருத்தலே சுற்றத்திற்கு அழகு.

23. **சூதும் வாதும் வேதனை செய்யும்**

சூதாட்டமும், தேவையில்லாத விவாதமும் துன்பத்தையே தரும்

24. **சை ஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண்**

பொருள் கொடுக்குமளவு இருந்தால், பிறருக்கு உணவிட்டு உண்ண வேண்டும்

25. **சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்**

சோம்பெறிகள் வறுமையில் வாடித் திரிவர்

26. **. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை**

தந்தை சொல்லெ உயர்ந்த மந்திரம் போலாகும்

27. **தாயிற் சிறந்த ஒரு கோயிலு மில்லை**

தாயே சிறந்த தெய்வமாகும்

28. **திரைகடல் ஓடியும் திரவியம் தேடு**

கடல் கடந்தாவது பொருள் தேட வேண்டும்

29. **தீராக் கோபம் போராய் முடியும்**

கோபம் சீக்கிரமாகப் போய் விட வேண்டும். இல்லையேல் அது சண்டையில் போய் முடியும்

30. **தேடாது அழிக்கின் பாடாய் முடியும்**

பொருளைத் தேடிச் சேர்க்காது, இருப்பதை செலவிட்டுக் கொண்டிருந்தால் துன்பத்தில் முடியும்

31. **தையும் மாசியும் வையகத்து உறங்கு**

தை, மாசி (வெயில் காலம்) மாதங்களில் வைக்கோல் வேய்ந்த வீட்டில் உறங்கு

32. . **தொழுது ஊண் சுவையின் உழுது ஊன் இனிது**

பிறரிடம் வணங்கி அந்த ஊதியத்தில் உண்பதை விட பயிர் செய்து உண்பதே இனிது

33. **தோழனோடும் ஏழைமை பேசேல்**

நெருங்கிய நண்பனிடத்தும் நம் வறுமை பற்றிப் பேசக் கூடாது

34. **நல்இணக்கம் அல்லது அல்லல் படுத்தும்**

நல்லோர் நட்பு இல்லையேல், அல்லல் படுவோம்

35. **நாடு எங்கும் வாழக் கேடு ஒன்றும் இல்லை**

நாடு செழித்திருக்குமானால் எவருக்கும் இன்பமே.

## 26. “மகாமசானம்“ சிறுகதையைத் திறனாய்வு செய்க.

**மானுட வாழ்வில் மனிதநேயம்**

வாழ்க்கை என்பது தன்னிடம் உள்ளதைப் பிறருக்குக் கொடுப்பது அடுத்தவரிடமிருந்து எதையும் எடுப்பது அன்று”என்றார் பிரெஞ்சுப் படைப்பாளி விக்டர் யூகோ, ஆனால் இரக்கமில்லாத உறவுகளால் கைவிடப்பட்ட ஏழைகளின் வாழ்க்கையை இந்த உலகத்தில் யாரும் கண்டு கொள்வதே இல்லை என்பதே கசப்பான உண்மை.

‘நடமாடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடும் கோயில் பரமர்க்கு அங்கு ஆகுமே’

என்பது திருமந்திரம்.

படங்களும் ஓவியங்களும் நிறைந்த மாடங்களை உடைய கோயிலின் இருக்கும் இறைவனுக்கு நாம் ஒரு பொருளைக் காணிக்கையாகத் தந்தால், அதுநடமாடும் கடவுள்களான ஏழைகளைப் போய்ச்சேராது.

ஆனால், நடமாடும் ஏழைகளுக்கு நாம் ஒன்று கொடுத்தால், அது படமாகும் கோயிலில் இருக்கும் இறைவனுக்கு நிச்சயம் போய்ச்சேரும், என்பதே அதன்கருத்து.

**இன்றைய உலகில் மனிதநேயம்**

இந்த இயந்திர உலகத்தில் பசிப்பிணியைப் பற்றியும், பட்டினியால் அவதியுறும் கடைக்கோடி மனிதர்களைப் பற்றியும் சிந்திப்பதற்கு யாரும் இல்லை.

சகமனிதன்படும் துன்பத்தை கண்டு இரங்கும் மனிதனைத் தேடித்தான் கண்டுபிடிக்க வேண்டும். இப்படி ஒரு அவலநிலை, மனிதர்கள் தம்மையொத்த மனிதர்களிடத்தில் மனிதநேயத்தோடு நடந்து கொள்ளாமல் இதைத்தான் பாரதி சொன்னான்.

'சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல்கண்டும்

சிந்தையிரங்காரடி கிளியே – செம்மை மறந்தாரடி'

**மகாமசானம் சிறுகதையில் மனிதநேயம்**

ஒருபரப்பரப்பான வாழ்க்கையை நகரின் மத்தியப்பகுதியில் போக்குவரத்து மிகுந்த ஷன நெருக்கடியான இடத்தில், நலிவுற்ற மனிதர்களின் வாழ்க்கை எப்படியிருந்து என்று படம்பிடித்துக் காட்டுகிறார் புதுமைப்பித்தன்.

'மகாமசானம்' என்றும் இந்தச்சிறுகதை புதுமைப்பித்தனின் படைப்புகளில் அவலச்சுவையை கட்ட அழகுபட நேர்த்தியாக, படிக்கிறவன் கதைக்குள் மூழ்கிக் கண்ணீர் வடிக்கவைக்கும் ஒருபண்பட்ட படைப்புஎன்று சொல்லவேண்டும்.

'புதுமைப்பித்தன் பார்த்திருக்கிறார் அந்ததப் பிச்சைக்காரன் சாவதை. குழந்தையை எதையும் கவனிக்காமல் ஓடிக்கொண்டியிருக்கும் மனிதர்களை காலகாலமாக சகமனிதனை மதிக்காத நேசிக்காத மனிதநேயம்மற்ற வாழ்க்கையை, இந்த யாதார்த்தத்தைப் பதிவுசெய்து அறுபது ஆண்டுகளுக்கு பிறகும் கூட நம்மை ஆழ்ந்து சிந்திக்கத் தூண்டும் கதைக்களம் அவருக்கு மட்டும் எப்படிசாத்தயமானது.

புதுமைப்பித்தன் படைப்புகளைப் பற்றி பேசும் ரா.ஸ்ரீ.தேசிகன்."ஒரு கவியுள்ளம் சோகத்தினால் சாம்பிய கவியுள்ளோம் வாழ்க்கை முட்களில் விழுந்து இரத்தம் கக்குகிற உள்ளம் கதைகள் மூலம்பேசுகிறது" என்று குறிப்பிடுகிறார்.(புதுமைப்பித்தன் படைப்புகள்).

கலைஞன் இறந்து பட்டாலும் அவன் படைப்புகள் வாழ்ந்துகொண்டே இருக்கின்றன. என்பது மறுக்க முடியாத உண்மை. புதுமைப்பித்தனின் சிறுகதைத் தலைப்பிலேயே ஒருபுரட்சி ஏற்படுத்தியிருக்கிறார். ஆனந்தவிகடன் சித்தரஅகராதி மாசனம் என்பதற்கு மயானம், சுடலை என்று பொருள் தருகிறது. அப்படி என்றால்' மகாசானம், என்பதற்கு மிகப்பெரிய சுடுகாடுஎன்று அர்த்தமா? யாருக்குத் தெரியும். புண்ணித் தலமாக வணங்கப்படவேண்டிய ஒருமாநகரம், மனிதத்துவம் இல்லாத மனிதர்களின் ஈவுஇரக்கமற்ற குணத்தினால் இப்படி மயானமாகிப் போய்விட்டது. என்று உருவகப்படுத்தி இருப்பார் என்று எடுத்துக்கொள்ளலாமா? எழுதுவதில் புதுமை எழுத்தில் புரட்சி என்று முத்திரை படைத்ததனால் தானே புதுமைப்பித்தன் என்று அழைக்கப்பட்டாரோ. புதுமைப்பித்தன், ஒவ்வொருவரும் உச்சிமுகர்ந்து பாரட்டப்பட வேண்டிய உன்னதக் கலைஞன்.

## 27.முக்கூடற் பள்ளு குறிப்பிடும் நெல் மற்றும் மீன்வகைகளைச் சுட்டுக.

### முக்கூடற் பள்ளு – மீன் வகைகள்

குற்றாலத்தைத் தன்னிடத்தே கொண்ட திரிகூடமாகிய பெரிய மலை முகடுகளில், மேகங்கள் சென்று படிந்து பொழிந்து, மழை நீரானது ஒன்று சேர்ந்து, பொருநை நதியோடு சேர்தலை விரும்பி, முக்கூடற் பதியை வலங்கொண்டு வரும்.

நீர் வற்றுதல் இல்லாத மடுக்களில் பரவை, குரவை, வாளை, கோளை, தேளி, மயிந்தி, உழுவை, அயிந்தி, கூனி, மணலி, ஆறால், ஓராமீன், பிடிக்கவே முடியாத அயிரை, கெண்டை, கெளிறு, பெரிய வரால்கள் ஆகியவை பலவும் கிடைக்கும். அவை எல்லாம் புதுவெள்ளம் வரவும் எதிரேறிச் சென்று அணையிலே பாயும். அங்கிருந்து கால்வாய்களிலே பாயும். பின்னர், குளத்திலே பாய்ந்து வயல்களில் எல்லாம் பாயும். இத்தகைய வளமுடையது சிற்றாறு. அது சிற்றாறு என்பதொரு பெயரினைப் பெற்றிருந்தாலும்கூட, ஒப்பற்ற சிறிய உருவத்தையுடைய வாமனரின் பெருமையைப் போல்வதாகும். பள்ளியர்களே! அந்தச் சித்திராநதி பெருகிவருகின்ற அழகினைப் பாருங்கள்.

**கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்** 19LSU101

**கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்** *(For Science Students)*

**தமிழ்த்துறை**

**முதலாம்** ***பருவம்: இரண்டாம் இடைத்தேர்வு*** *நாள்:*

***நேரம்: 2 மணி*** ***மொத்த மதிப்பெண்கள்:50***

***பகுதி: அ: ஒரு மதிப்பெண் வினாக்கள்*** ***(20X1=20)***

1. உமர்கய்யாம் பாடல்களைத் தமிழில் மொழிபெயர்த்தவர் ____________

(அ). பாரதியார் (ஆ). அறிஞர் அண்ணா **(இ). கவிமணி** (ஈ). அப்துல் ரகுமான்

2. இனி எனக்கு மரணம் ஒருபோதும் இல்லை என்ற கவிஞர் யார்?

(அ). பாரதியார் **(ஆ). சிற்பி பாலசுப்பிரமணியம்** (இ). கவிமணி (ஈ). தாமரை

3. கவிமணி இறைவனை எங்கே காணவேண்டும் என்கிறார்?

(அ). கோவிலில் (ஆ). சிலையில் **(இ). உள்ளத்தில்** (ஈ). உடலில்

4. கீழே குறிப்பிடுபவர்களில் சாகித்ய அகாதமி விருதுபெற்ற கவிஞர் யார்?

(அ). பாரதியார் **(ஆ). சிற்பி பாலசுப்பிரமணியம்** (இ). கவிமணி (ஈ). தாமரை

5. "திட்பம் " என்பதன் பொருள் யாது?

(அ). காரியம் **(ஆ). வலிமை** (இ). செயல் (ஈ). திறமை

6. தில்லை என்பது எந்த ஊரைக் குறிக்கும்?

**(அ). சிதம்பரம்** (ஆ). காசி (இ). திருத்தணி (ஈ). திருப்பதி

7. காலம் என்ற கவிதையின் ஆசிரியர் யார்?

(அ). பாரதியார் **(ஆ). சிற்பி பாலசுப்பிரமணியம்** (இ). கவிமணி (ஈ). தாமரை

8. வினைத்திட்பம் என்பது ஒருவனின் ____________

(அ). செயல்திட்பம் (ஆ). உடற்திட்பம் **(இ). மனத்திட்பம்** (ஈ). உரைத்திட்பம்

9. நாலடியாரோடு நெருங்கிய தொடர்புடைய நூலினைக் குறிப்பிடுக.

(அ). திருக்குறள் (ஆ). நீதி நூல் (இ). கொன்றை வேந்தன் **(ஈ). பழமொழி நானூறு**

10. பழமொழி நானூற்றின் ஆசிரியர் யார்?

(அ). திருவள்ளுவர் (ஆ). பாரதியார் **(இ). முன்றுறையரையனார்** (ஈ). சமணமுனிவர்கள்

11. 'சுரை ஆழ; அம்மி மிதப்ப' - தொடர் இடம்பெற்ற நூல் எது?

**அ) பழமொழி நானூறு** ஆ) திருக்குறள் இ) கொன்றைவேந்தன் ஈ) மூதுரை

12. 'வரை' என்பதன் பொருள் என்ன?

(அ). காடு **(ஆ). மலை** (இ). கடல் (ஈ). வானம்

13. எப்புவிக்கும் மன்னவர்கோன் ________.

**(அ). தென்னவன்** (ஆ). சேரன் (இ). நந்திவர்மன் (ஈ). சோழன்

14. நந்திவர்மனின் மரணத்தினால் கானுறு புலியை அடைந்தது எது________.

(அ). புகழ் **(ஆ). வீரம்** (இ). செல்வம் (ஈ). பயம்

15. 'அரி' என்பது யாரைக் குறிக்கும்?

(அ). சிவன் **(ஆ). திருமால்** (இ). இந்திரன் (ஈ). முருகன்

16. 'முட்டை' என்ற படைப்பின் ஆசிரியர் யார்?

(அ). கி.ஆ.பெ விசுவநாதம் (ஆ). புதுமைப்பித்தன் (இ). நாஞ்சில் நாடன் **(ஈ). பிரபஞ்சன்**

17. ராஜேஸ்வரி என்ற கதாபத்திரம் இடம்பெற்றுள்ள சிறுகதை எது?

(அ). அந்நியர்கள் (ஆ). மகாமசானம் (இ). இந்நாட்டு மன்னர் **(ஈ). அப்பாவின் வேஷ்டி**

18. மனதுக்கு இனியவர்கள் என்ற புதினத்தை எழுதியவர் யார்?

அ) பிரபஞ்சன் **ஆ) ஆர்.சூடாமணி** இ) கு.அழகிரிசாமி ஈ) நாஞ்சில் நாடன்

19. ஸவிதா என்ற கதாபத்திரம் இடம்பெற்றுள்ள சிறுகதை எது?

**(அ). அந்நியர்கள்** (ஆ). மகாமசானம் (இ). இந்நாட்டு மன்னர் (ஈ). அப்பாவின் வேஷ்டி

20. அந்நியர்கள் என்ற சிறுகதையின் ஆசிரியர் ________.

அ) பிரபஞ்சன் **ஆ) ஆர்.சூடாமணி** இ) கு.அழகிரிசாமி ஈ) நாஞ்சில் நாடன்

## பகுதி: ஆ - இரு மதிப்பெண் வினாக்கள் (3X2=6)

***அனைத்து வினாக்களுக்கும், ஐந்து அல்லது ஆறு வரிகளில் மட்டும் விடையளி.***

### 21. 'கவிமணி' – குறிப்புவரைக.

கவிஞர் கவிமணியின் கோவில் வழிபாடு என்னும் கவிதை இறைவன் உள்ளத்தில் உள்ளான் என்ற உண்மையை உணர்த்தத் தோன்றியதாகும்.

### 22. 'கற்றலின் கேட்டலே நன்று' – இடம்சுட்டிப் பொருள் தருக

குடிப்பதற்கு இனிமையான, உவற்பில்லாத நல்லநீர் கிணற்றைத்தவிர வேறு இடத்தில் இல்லையென்று நினைக்கும் கிணற்றுத்தவளை போல், தாமும் கருதாமல். நாள் முழுவதும் வெறுப்பின்றி இனிதாகப் படித்தலைக் காட்டிலும் அறிஞர்களிடம் பாடம் கேட்டல், ஊன்று கோல் போல் உதவுமாதலால் **"கற்றலைவிட கேட்டலே"** மேல் என்கிறார்.

### 23. நந்திவர்மன் இறந்ததன் கையறு நிலையைச் சுட்டுக.

நந்திவர்மனே! உன் முக அழகு நிலவை அடைந்து விட்டது. உன் புகழ் கடலில் மூழ்கி விட்டது. உன் வீரமோ புலியிடம் புகுந்து விட்டது. உன் கரங்களின் கொடை கற்பக மரத்திடம் சேர்ந்து விட்டது. உன் நாட்டின் திருமகள் திருமாலிடம் புகுந்து விட்டாள். உன் உடல் செந்நிற நெருப்பை அடைந்தது. எல்லாமே உன்னை விட்டு அகன்று விட்டன. எனவே நீயே இல்லை எனும் போது நானும் என் வறுமையும் எவ்விடம் போவது!.

## பகுதி: இ - பெரு வினாக்கள் (4X6=24)

***அனைத்து வினாக்களுக்கும், முன்னுரை மற்றும் முடிவுரை எழுதி விடையளிக்கவும்.***

### 24. காலம் என்ற கவிதையின் திரண்ட கருத்தினை விளக்கிவரைக.

கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய காலம் என்ற கவிதை உயிரியல், வானவியல் போன்ற அறிவியல் கொள்கைகளின் செறிவாக அமைகின்றது.

**வானவியல் கொள்கைகள்**

“சூரியச் செம்போத்து
உஷ்ண இறகொன்றைப்
பூமியென உதிர்த்தது”

வானியலில் நடந்த மாற்றத்தைக் கவிஞர் மூன்று வரிகளில் எவ்வளவு அழகாக வடித்துக் காட்டிவிட்டார். ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்பு சூரியன் என்ற மிகப் பெரிய நெருப்புக் கோளம், அதனுள் நிகழ்ந்த அதிர்வுகளால் வெடித்துச் சிதறியது. வெடித்துச் சிதறிய துண்டுகள் ஒவ்வொன்றும் சூரியனை மையமாக வைத்துத் திசைக்கு ஒன்றாகச் சென்று இயங்க ஆரம்பித்தன. இப்படி இயங்கிய கோள்களையே சூரிய குடும்பம் என்கிறோம். அந்தக் குடும்பத்தில் ஒன்றுதான் பூமி.

“வெடித்த வாய்களில்
பீறிட்ட வாயுத் தகிப்புகளில்
உறைந்த பனி இடுக்குகளில்
சொரிந்த மழைத் தாரைகளில்
முதல் கடல் அலைப்பில்
புதைந்தும் சிதைந்தும் மறைந்தும் இருந்தோம்.

சூரியனிலிருந்து வெடித்து வந்தமையால் பூமியும் முதலில் ஒரு நெருப்புக் கோளமாகத்தான் இருந்தது. காலம் செல்லச் செல்ல பூமியின் மேற்புறத்தில் நடந்த வேதியியல் மாற்றங்களால், அம்மேற்பகுதி குளிர்ந்து நிலமாக உருமாறியது. நில இடுக்குகளில் பனிப் பாறைகள் உருவெடுத்தன. அப்பாறைகள் சூரிய வெப்பம் பட்டு உருகி பெரும் ஆறுகளாக உருவெடுத்து, அவ்வாறுகள் ஒன்று சேர்ந்து மிகப்பெரிய தண்ணீர் சாம்ராஜ்யமான கடல் தோன்றியது. நீரில்தான் முதன் முதலில் ஜீவராசிகள் உருவாக ஆரம்பித்தன.

**உயிரியல் கொள்கைகள்**

“விசுவ வெளிப் பாழின்
மர்மக் கருப்பையில்
நானும் காலமும்
ஒளிந்திருந்தோம்”

இந்தப் பிரபஞ்ச வெளியில் நிறைந்திருந்த அணுக்களின் சேர்க்கையால்தான், பூமியில் உயிர்கள் உருவாகின என்ற உயிரியல் தத்துவத்தை இவ்வரிகள் எளிமையாக உணர்த்துகின்றன. உயிர்களுக்கு இந்தப் பிரபஞ்சம்தான் கருவறை. தாயின் கருவறையை எந்தக் குழந்தையும் கத்தி கொண்டு கிழிப்பதிலை. ஆனால் மனிதனோ தன்னால் முடிந்தவரை இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள காற்று, நிலம், நீர் போன்ற அனைத்து உயிர் ஆதாரங்களையும் அழிக்கிறான். உயிரியலின் தந்தை சார்லஸ் டார்வினின் பரிணாமக் கோட்பாட்டை மையமிட்ட கொள்கைகளைச் சிற்பி பின்வருமாறு விளக்குகின்றார்.

“உயிரின் பரிமாணப் பயணம்
ஊர்ந்து வர ஊர்ந்து வர
நீந்தி வர நீந்தி வர
பறந்து வர பறந்து வர
இயங்கிய மூல
ஜீவத் துளும்பலில்
தெறித்த திவலை நான்”

டார்வின் உயிர் இயக்கப் பரிணாமத்தை ஊர்வன, பறப்பன என்று இரு வகையாகப் பிரிக்கிறார். நீரில் முதன் முதலில் ஊர்ந்து செல்லும் உயிர் வகையான அமீபா தோற்றம் பெற்றது. அமீபா ஒவ்வொன்றும் பிரிந்து பிரிந்து தானாக இனப்பெருக்கம் செய்யக் கற்றுக்கொண்டன. இப்படிப் படிப்படியாக வளர்ச்சியடைந்த அமீபா போன்ற சிற்றுயிர்களின் அடுத்த பரிணாமமாக மீன்கள் உருவாகின. சில நீர்நிலைகளைக் கூர்ந்து கவனித்தால் அதனுள் உள்ள மீன்கள் செதில்களை விரித்து மேலே துள்ளிப் பறக்க முயற்சிப்பதைக் காணலாம். இப்படிப் பறக்க முயற்சித்த மீன்கள்தான் பறவைகளாக உருவெடுத்தன. அம்மீன்களின் செதில்கள்தான் பறவைகளின் இறகுகளாகப் பரிணாம வளர்ச்சியடைந்தன. இப்படி நீர்வாழ் உயிரினங்களிலிருந்து பறவைகள் தோன்றின.

"தெறித்த திவலை நான்" என்ற கவிஞரின் வரிகள் ஆய்வாளனுக்கு ஆனந்தம் தரக்கூடிய செறிவான வரிகளாகும். நீர் அலைகளிலிருந்து தெறித்து நிலத்தில் விழுந்த நீர்வாழ் உயிரினங்கள்தான் நிலத்தில் ஊர்ந்து செல்லும் உயிர்களாகப் பரிணாம வளர்ச்சி பெற்றன. ஊர்ந்து செல்லும் பல்லி இனங்களிலிருந்து அனுபவம் முற்றியதாக எலி உருவாகிறது. எலிகளின் உட்சபட்ச பரிணாமத் தோற்றம் டைனோசர் ஆகும். நம் சிந்தனைக்கு எட்டா அளவில் பல காலங்களுக்கு முன்பே டைனோசர் இனம் அழிந்துவிட்டது. இப்படி உலகில் தோன்றிய உயிர்களில் இரு வகை உண்டு. 1.முட்டையிட்டுக் குஞ்சுகளை ஈன்று இரைகொடுப்பன, 2.குட்டிகளை ஈன்று பால் கொடுப்பன. இந்த இரண்டாவது வகையான பாலூட்டிகளிலிருந்து தோன்றிய பரிணாமத் தோற்றம்தான் மனிதன்.

"நான்கு கால் ஜீவிகள்
பின் கால் ஊன்றி
முன் கால்கள்
கரங்களாய் நிமிர்ந்து
மூளையைச் சிலிர்த்துக் கொண்டபோது
நான் நானானேன்"

நான்கு கால் ஊன்றி நடந்த குரங்குகள் பின்னங்கால்களை ஊன்றி, முன்னங்கால்களைக் கரங்களாக உயர்த்தி எழுந்து நின்றபோது மனிதன் தோன்றினான். குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்ற டார்வினின் கோட்பாட்டினைக் கவிஞர் இவ்வரிகளில் அழுத்தமாகப் பதிவு செய்கிறார்.

பூமிப் பந்தில் தோன்றிய ஓரறிவு உயிர்கள் படிப்படியாக வளர்ந்து இரண்டறிவு, மூன்றறிவு, நான்கறிவு, ஐந்தறிவு எனப் பரிணாம வளர்ச்சியடைந்து தற்போது பகுத்தறிவு வளர்ந்த மனிதனாக இருக்கிறான். இந்த வளர்ச்சிக்கு பல்லாயிரக்கணக்கான காலங்களை உலகமும் உயிர்களும் கடந்து வந்திருக்கும். காலத்துடன் தன் கரங்களைக் கோர்த்து உயிர்கள் கடந்துவந்த பாதையில் பல்வேறு அனுபவங்களை அவை அடைந்திருக்கும். காலம் கற்றுக் கொடுத்த அனுபவங்களின் முதிர்ச்சியே மனித அறிவு. ஆகவேதான் கவிஞர் இக்கவிதைக்குக் காலம் என்று பெயரிட்டுள்ளார். பிரபஞ்சத்தின் மீது கவிஞர் கொண்ட அன்புள்ளம் கவிதையின் கடைசி வரிகளில் வெளிப்படுகின்றன.

"அணுக்களின் பிள்ளை நான்
ஆனதால் புவியின்
எந்தச் சேதமும்
என்னை அழ வைக்கின்றன
எந்த உவகையும்

என்னைத் துள்ளி எழ வைக்கின்றன"

இந்தப் பூமியின் பிள்ளையாக நான் இருப்பதால், அதற்கு ஏற்படுகின்ற ஒவ்வொரு சேதத்தையும் தாங்க முடியாமல் நான் அழுகின்றேன் என்ற கவிஞரின் மொழி, இயற்கையின் மீது பற்று கொண்ட ஒவ்வொரு மனிதனுடைய ஆழமான அழுகையின் வெளிப்பாடாக அமைகின்றது. இயற்கையை மாசுபடுத்தும் மனிதர்களுக்கு இந்த வார்த்தைகள் அகிம்சை எச்சரிக்கையாக அமைகின்றன. குடிக்க நல்ல நீரும், சுவாசிக்க நல்ல காற்றும், உண்ண நல்ல உணவும், இருக்க நல்ல இடமும் இல்லாத அளவிற்குப் பூமியையும் இயற்கை வளங்களையும் அழித்த பிறகு, கூடவே மனிதனும் அழிந்து விடுவான். ஆகவே இயற்கையை அழிக்காத நல்ல மாற்றங்களைப் பூமியில் உருவாக்குவோம்.

## 25. வினைத்திட்பத்தின் இன்றியமையாமையைத் தொகுத்துரைக்க.

### வினைத்திட்பம் என்பதன் விளக்கம்

ஒரு வினையின் திண்மை, உறுதி என்பது அதனை முடித்தற்கு உரியவனின் மனத்திண்மையே ஆகும். வினை நல்ல முறையில் முடிவதற்குத் துணையாகின்ற படை, அரண், நட்பு முதலானவையும் திண்மைகள் என்று கூறப்பட மாட்டா.

### வினைத்திட்பம் குறித்த கொள்கை

ஒரு வினையைச் செய்வதற்கு முன்னர் அதற்கு இடையூறு ஏற்படுமாயின் அவ்வினையைச் செய்யாமையும், செய்யும் வினையில் இடையூறு எற்பட்ட வழி அதற்குத் தளராமையும் ஆகிய கொள்கையே நீதி நூல் ஆராயந்த அமைச்சரது கொள்கையாகும்.

### வினை செயலாற்றும் வகை

இடையூறு ஏற்படுத்துவோருக்கு இடையே இருந்து ஒரு செயலைச் செய்ய வேண்டிய சூழலில் பின்வருமாறு செயல்பட வேண்டும். குறித்த ஒரு செயலை பிறர் அறியாத வண்ணம் முதலில் மறைத்து, பின்னர் பிறருக்குப் புலப்படும் வகையில் செய்து முடிப்பதே வினை செய்யக் கூடிய வகை ஆகும். அதுவே வினைத்திட்பம் ஆகும். அங்ஙனம் இன்றி அவ்வினையானது இடையிலேயே பிறருக்குப் புலப்படுமாயின் செய்பவனுக்குப் பெருந்துன்பத்தைத் தந்து அச்செயலையும் முடக்கும்.

### வினைத்திட்பத்தின் அருமை

ஒரு வினையை இவ்வாறெல்லாம் செய்து முடிக்கலாம் என வரிசைபட வழி சொல்லுதல் எல்லோருக்கும் எளியதாகும். ஆனால் சொல்லிய வழியில் நின்று அதனை வெற்றியுறச் செய்து முடிப்பது என்பது அனைவருக்கும் அரியவாகும்.

### வினைத்திட்பத்தின் சிறப்பு

சிந்தனையாலும், செயல் திறனாலும் சிறப்பு பெற்றுப் பிற இலக்கணங்களால் பெருமை பெற்ற அமைச்சரது வினைத்திட்பமானது அரசனுக்குச் செல்வத்தையும், புகழையும் தரக்கூடியதாகும். அரசனாலும் எல்லோராலும் நன்கு மதிக்கப்படக் கூடியதாக அமையும்.

**வினைத்திட்பமுடையவர் எய்தும் பயன்**

ஒரு செயலைச் செய்ய நினைத்தவர் அவ்வினையை முடிப்பதற்குரிய மனவுறுதி உடையவராயிருப்பின், அவர் அடைய எண்ணிய பொருள்கள் எல்லாவற்றையும் அவர் எண்ணியவாறே எய்துவர்.

**வினைத்திட்பம் உடையவரை அறிதல்**

உருண்டு செல்லும் பெரிய தேரின்கண் உள்ள அச்சாணி உருவில் சிறியது. ஆயினும் தேர் ஓட அதுவே அடிப்படை. அதுபோன்று உருவில் எளியவராயினும் எடுத்த காரியத்தில் உறுதியுடன் இருந்து வினையை முடிப்பவர் இவ்வுலகில் உண்டு. ஆதலால் உருவத்தில் சிறுமை கண்டு எவரையும் இகழாது இருத்தல் வேண்டும்.

**வினை செய்யும் வகை**

பலகாலம் ஆராய்ந்து கலக்கமின்றி மனம் தெளிந்து தாம் செய்வதாகத் தேர்ந்தெடுத்துத் துணிந்த செயலை, பின்னர் மனச்சோர்வில்லாமலும் காலம் தாழ்த்தாமலும் செய்து முடிக்க வேண்டும்.

**வினை செய்யும் உறுதி**

ஒரு செயலைச் செய்ய முயலும் பொழுது முதலில் துன்பம் மிக வருமாயினும் அதனைக் கண்டு தளர்தல் கூடாது. அச்செயல் முடிவில் இன்பம் தரும் என்ற நம்பிக்கை வேண்டும். எனவே எச்செயலினையும் மனவுறுதியோடு செய்தல் வேண்டும்.

**வினைத்திட்பம் இல்லாதவரது இழிவு**

ஒரு செயலைச் செய்வதற்குரிய மனவுறுதி இல்லாதவருக்கு அம்மனவுறுதி அல்லாத பொருள், படை, நட்பு, அரண் முதலிய உறுதிபாடுகளெல்லாம் அமைந்தாலும் அவை பயனற்றவையே. மனத்திட்பம் இல்லாத அவரைக் கண்டு உலகிலுள்ள உயர்ந்தோர் மதியார்.

**26. 'அந்நியர்கள்' சிறுகதையின் உறவுப் பின்புலம் குறித்து விவரி.**

**27. விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.**

(அறிவியல் பட்ட மாணவர்க்குரியது – For Science Students Only) ………………..

**கற்பகம் உயர்கல்வி கலைக்கழகம்** **19LSU101**

**கலை, அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்**

**தமிழ்த்துறை**

**முதல் இடைத்தேர்வு - பகுதி-I, தமிழ்த்தாள் : I**

**நேரம்: 2 மணி** **மதிப்பெண்கள்: 50**

**பகுதி: அ**

**சரியான விடையினைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **(20X1=20)**

1. 'ஈ' என்பதன் பொருள்________.

அ) செல்வம் ஆ) **கொடு** இ) பெறு ஈ) வாழ்த்து

2. எந்த அரசருடைய ஆட்சிக் காலத்தை, 'சிற்றிலக்கிய காலம்' என்று அழைக்கிறோம்?

அ) சேரர் ஆ) பல்லவர் இ) பாண்டியர் ஈ) **நாயக்கர்**

3. காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவர்கள் யார்?

அ) **பல்லவர்** ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) நாயக்கர்

4. நந்திமன்னனின் கரங்கள் எதனை அடைந்தன?

அ) நிலவை ஆ) புலியை இ) **கற்பக மரத்தை** ஈ) கடலை

5. திருக்குறளின் பொருள்பாலிலுள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை______.

அ) 25 ஆ) 60 இ)**70** ஈ) 45

6. பாரதிதாசன் நடத்திய கவிதை இதழ் _________.

அ) தென்றல் ஆ) கவிதாமண்டலம் இ) **குயில்** ஈ) கவி

7. முக்கூடற்பள்ளு நூல் இயற்றப்பட்ட காலம்________.

அ) **1680** ஆ) 1681 இ) 1880 ஈ) 1980

8. வேதநாயகம் பிள்ளையை 'நீயே புருஷமேரு' எனப் பாராட்டி பாடல் எழுதியவர்_________.

அ) பாரதியார் ஆ) **கோபாலகிருஷ்ணபாரதி** இ) பாரதிதாசன் ஈ) ஆனந்தரங்கர்

9. வினைத்திட்பம் என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

அ) உடல் வலிமை ஆ) பண வலிமை இ)சொல் வலிமை ஈ) **மன வலிமை**

10. 'முத்திக் கனியே என் முத்தமிழே' எனப் பாடும் நூல்______ .

அ) **தமிழ்விடுதூது** ஆ) நந்திக்கலம்பகம் இ) முக்கூடற்பள்ளு ஈ) தமிழலங்காரம்

11. 'உள்ளத்தில் உள்ளானடி; அது நீ உணர வேண்டுமடி' என உரைத்தவர் __________.

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) **கவிமணி** ஈ) அப்துல்ரகுமான்

12. 'உளவியல் எழுத்தாளர்' எனப் புகழப்படுபவர் யார்?

அ) அம்பை ஆ) தாமரை இ) **ஆர்.சூடாமணி** ஈ) நர்மதா

13. 'அன்பளிப்பு ' எனும் சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர்________.

அ) புதுமைப்பித்தன் ஆ) நாஞ்சில்நாடன் இ) **கு.அழகிரிசாமி** ஈ) பிரபஞ்சன்

14. புனலிடை வாய்க்கும் கலியும் - இதில் 'கலி' என்பதன் பொருள் என்ன?

அ) கலியுகம் ஆ) **துள்ளலோசை** இ) இன்பம் ஈ) தமிழ்

15. யாரை நாடு கடத்த வேண்டுமென அப்துல் ரகுமான் கூறுகிறார்?

அ) திருடன் ஆ) கடத்தல்காரன் இ) **ஊழல் பேர்வழி** ஈ) பிரிவினைவாதி

16. இருமுறை சாகித்திய அகாடமி விருது பெற்ற கவிஞர் யார்?

அ) அப்துல்ரகுமான் ஆ) மு.மேத்தாஇ) நாஞ்சில்நாடன் ஈ) **சிற்பி பாலசுப்பிரமணியம்**

17. கொங்குதமிழ் கோவை தந்த கவிஞர் என்று புகழப்படுபவர் யார்?

அ) கவிஞர் தாமரை ஆ) **கவிஞர் நர்மதா** இ) கவிஞர் சிற்பி ஈ) கவிஞர் மதியழகன்

18. போலிப்புலவர்களின் தலையில் குட்டுபவர் யார்?

அ) **பிள்ளைப்பாண்டியன்** ஆ) வில்லிப்புத்தூரார் இ) ஒட்டக்கூத்தர் ஈ) நக்கீரர்

19. புதுமைப்பித்தனின் முதல் படைப்பு எது?

அ) மகாமசானம் ஆ) பொன்னகரம் இ) காஞ்சனை ஈ) **குலாப்ஜான் காதல்**

20. அபிஷேகம் என்னும் வடமொழிச் சொல்லிற்கு ஏற்ற தமிழ்ச்சொல் எது?

அ) குடமுழுக்கு ஆ) **திருமுழுக்கு** இ) வழிபாடு ஈ) சடங்கு

*பகுதி – ஆ*

*அனைத்து வினாக்களுக்கும் சுருக்கமாக விடையளி:* *(3X2=6)*

**21.. 'பாருக்குள்ளே நல்லநாடு' - கவிதையின் மையக்கருத்தைச் சுட்டுக.**

*அப்துல் ரகுமான் (பிறப்பு: நவம்பர் 2, 1937), தமிழ்நாட்டைச் சேர்ந்த கவிஞரும், தமிழ்ப்பேராசிரியரும் ஆவார். கவிக்கோ என்று சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறார். அவர் பால்வீதி என்ற கவிதைத் தொகுதி மூலம் தம்மை ஒரு சோதனைப் படைப்பாளியாக இனங்காட்டிக் கொண்டார். தமிழில் ஹைக்கூ, கஜல் ஆகிய பிறமொழி இலக்கியங்களை முனைந்ததிலும் பரப்பியதிலும் இவர் குறிப்பிடத்தக்கவர் ஆவார். ஆலாபனை கவிதைத் தொகுப்புக்காக சாகித்ய அகாடமி விருது பெற்றவர்.* இன்றைய சுதந்திர இந்தியாவில் நீதிக்கும், நேர்மைக்கும் உண்மையான உழைப்புக்கும் இடமில்லை என்பதை இக்கவிதையின் மூலம் எடுத்துரைக்கிறார்.

**22. "அத்தன் கொன்று பெருநரகழற்சேர்ப்பானே" – இடம் சுட்டிப் பொருள் தருக.**

பெற்றோரைப் போற்றாதவர்கள் நரகத்தில் துன்புறுவர்:வைத்து வளர்த்தவர்க்குப் பூ, நிழல், பழம் நல்காத மரத்தை வெட்டி எரிப்பது போன்று, தாய் தந்தையரை வணங்காத அறிவிலாரை ஆண்டவன் இருள் உலகில் தள்ளி வருத்துவன்.

**23. கு.அழகிரிசாமி – குறிப்பு வரைக.**

**………….**

*பகுதி – இ*

*பெருவினாக்கள்:அனைத்து வினாக்களுக்கும் விடையளி:* *(4X6=24)*

**24. தொலைந்துபோனேன் கவிதையில் பெண்களின் நிலையை கவிஞர் தாமரை எவ்வாறு காட்சிப்படுத்துகிறார்?**

***கவிஞர் நர்மதாவின் இயற்பெயர் புஷ்பம். கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர். சென்னையில் மழலையர் பள்ளி நடத்தி வருகின்றார். கவித்துவ உள்ளம் வாய்ந்தவர். 'நல்ல பெண்மணி' என்ற மகளிருக்கான இதழை நடத்தியவர். பெண்ணியச் சிந்தனையாளர். இவரது 'நாங்கள் அவர்களல்ல' என்ற கவிதைத் தொகுப்பி ருந்து இக்கவிதை இடம்பெற்றுள்ளது.***

பட்டுப் பாவாடை சட்டையும் பாதங்களில் கொலும் அணிந்து வீட்டிலே அடம்பிடிக்கும் கடைக்குட்டியான என்னை பார்த்துப் பார்த்து அலங்பரித்து பக்கத்து ஊர் திருவிழாவிற்கு மாடு பூட்டிய வண்டியில் அழைத்துச் சென்றார்கள். அங்கே எல்லா இடத்திலும் வண்ணமயமான வானவில் போன்று கதம்ப மாலைகள் எங்கும் தொங்கிக் கொண்டிருந்தன. மயிலாட்டம், ஒயிலாட்டம், கரககாட்டம், புலியாட்டம் . கும்மி போன்ற கலைகளும் ,வான வேடிக்ககைளும் விதவிதமாகக் காட்சியளித்தன. திருவிழாக் கடைகளில் உள்ள பலகாரங்களைக் கேட்டு அடம்பித்தேன். எப்பக்கம் திரும்பினாலும் மனிதர்கள் அம்மனுக்குக் கூள்காய்ச்சும் விறகு அடுப்புக்கள், எல்லா இடங்களிலும் அலைந்து களைத்துப்போன நான் திடீரெனத் தொலைந்து போனேன். என்னைக் காணாமல் உறவினர் தேடினர், ஒலிபெருக்கி அலறியது, ஊர்முழுக்கத் தேடினர். அரைமணிநேரத்திற்குப் பிறகு கண்டுபிடிக்கப்பட்டேன். என்னைத் திரும்பப்பெற்ற மகிழ்ச்சியில் என்தாய் எல்லா தெய்வங்களுக்கும் நேர்ந்து கொண்டாள். அப்பா என்ன ஆர்வமாகத் தோளில் தூக்கிக் கொண்டார். அண்ணன் என்னை நெற்றியில் முத்தமிட்டான். அத்தை அப்போதே அங்காளம்மன் கோவிலில் அங்கப்பிதர்ஷணம் செய்தாள், பாட்டி அப்போதே பழநிக்கு முடிகொடுக்க முடிவெடுத்தாள். அழைத்து வந்த பெண்ணிற்கு அறைப்பவுனில் மூக்குத்தியும், பட்டுப்புடவையும் கொடுத்தார்கள்.

ஐந்து வயதில் நடந்த இந்நிகழ்ச்சி நேற்று நடந்ததுபோல் இருக்கிறது. இருபது வருடங்கள் ஓடிவிட்டன அதற்குப் பல மாற்றங்களும் நிகழ்ந்துவிட்டன. மேற்கொண்டு படிக்கவேண்டும் என அப்பாவிடம் சொன்னால் பேசாதே மாப்பிள்ளை பார்த்தாகிவிட்டது என்றார். படிப்பில் நான்தான் முதலிடம் என்று அம்மாவிடம் சொன்னால் சும்மாயிரு சமையல் தெரியுமா என்றாள். அண்ணனும் கைகொடுக்கவில்லை, என்னைப் பெண்பார்க்க வந்தார்கள். கிடத்த இடத்திலெல்லாம் வரதட்சணை கேட்டார்கள். அப்பாவின் சேமிப்பு எல்லாம் சீர்வரிசைக்காக இழந்தாகிவட்டது. என்னுடைய விருப்பத்திற்கு யாரும்செவிசாய்க்கவில்லை. அங்கு பணம் பொருட்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் தரப்பட்டது.. என்னுடைய திருமணவிழாவில் நான் தொலைந்து போனேன் ஆனால் அங்கு யாரும் என்னைத் தேடமுயற்சிக்கவில்லை என தன் ஆழ்மனப் புலம்பல்களை வெளிளப்படுத்துகிறார் கவிஞர் தாமரை.

## 25. தமிழ்விடுதூது கூறும் தமிழின் சிறப்பைக் கட்டுரைக்க.

**தமிழின் சிறப்பு** திருமுருகாற்றுப்படை முதலாக மலைபடுகடாம் ஈறாக அமைந்த பத்துப்பாட்டு நூல்களும், நற்றிணை முதலாகப் புறநானூறு இறுதியாக அமைந்துள்ள எட்டுத்தொகை நூல்களும், குற்றமில்லாது அறங்களைக் கூறும் நாலடியார், கார்நாற்பது, களவழி நாற்பது முதலிய பதினெட்டு நூல்களும், இளஞ்சூரியர், முதுசூரியர் என்னும் இரட்டைப்புலவர்கள் பொன்மாலைகளால் மாதைநாதர் மீது பாடிய திருவாமாத்தூர்க் கலம்பகமும், மூன்று படைகளோடு கலிங்கத்தின்மீது போர்தொடுத்து ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனைப் பாடிய கலிங்கத்துப்பரணியும், புகார் நகரில் இரண்டாம் இராசராச சோழனிடம் ஒவ்வொரு கண்ணிக்கும் ஓராயிரம் பொன் பரிசில் பெற்ற ஒட்டக்கூத்தர் பாடிய இராசராச சோழன் உலாவும், குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழும், பேரறிவுடைய சான்றோர், தேவாரம் முதலிய நூல்களாகிய மெய்காப்பாளர் காக்க, மனத்தே வீரம் செறிந்து தீவினை நீங்கச் செயல் செய்து வரும் கவிதையாம் மன்னனே(தமிழ்).

தமிழே! உனக்குத் தலைமைப் பேறு அளித்தால், உமக்கு ஒப்பாவர் ஒருவருமிலர். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நால்வகைப் பாக்களும் வயலின் வரப்புகளாகவும், துறை, தாழிசை, விருத்தம் என்னும் பாவினங்கள் மடைகளாகவும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நாற்கரணங்களையும் நல்ல ஏர்களாகவும் கொண்டு சொல்லேருழவர் உழவு செய்ய, வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகதம் ஆகிய செய்யுள் நன்னெறிகளே விதைகளாக அறம், பொருள், இன்பம், வீடு ஆகியன விளைபொருள்களாயின. இப்பயிர்களின் இடையே வளரும் களைகளாகிய போலிப் புலவர்களின் கூட்டம் பெருகாமல் குட்டுவதற்கு அதிவீரராம பாண்டியனும், செவியை அறுப்பதற்கு வில்லிப்புத்தூரனும், தலையை வெட்டுவதற்கு ஒட்டக்கூத்தனும் இருந்தமையால், தமிழே! நீ கிளைத்துச் செழித்து வளர்ந்தாய்.

தமிழே! பால், முந்திரி, வாழை, கரும்பு, இளநீர் போல் பல்வகையான சுவைகளைத் தருகின்றாய். தெளிந்த அமுதமாகவும், மேன்மையான வீடுபேற்றை அளிக்கும் கனியாகவும், அறிவினால் உண்ணப்படும் தேனாகவும் விளங்கும் தமிழே! உம்மிடத்தில் மகிழ்ந்து உரைக்கும் ஒரு விண்ணப்பம் உண்டு கேட்பாயாக.

## 26. நலிந்தோர் வாழ்க்கையை, 'இருவர் கண்ட ஒரே கனவு' சிறுகதை வழி விவரி.

## 27. இந்திய ஆட்சிப்பணித் தேர்வில் வெற்றி பெற்ற நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.